பக்கங்கள்: பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 11 செவ்வாய்க்கிழமை (25-06-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:212

புலிகளின் வரிவிவரப் பட்டியல் அறிவிப்பு

# முக்கிய பொருள்கள் எவற்றுக்கும் 25சதவீதத் தீர்வை கிடையாது!

## மக்கள் மத்தியில் தவறான கருத்து என்கிறார் தமிழேந்தி

பளை,ஜூன்25

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் ஊடாக வடக்கே எடுத்துவரப்படும் பொருள்களில முக்கியமான எவற்றிறகும் 25 சதவீத வரி அறவிடப்படுவதில்லை. ஆனால், புலிகள் 25சதவீத தீர்வை அறவிடுவதாக மக்கள் மத்தியில் கருத்துப் பரப்பப்பட்டுள்ளது. இது மிகத் தவறானதாகும்.

மக்களின் பாவனைக்குத் தேவையானது எனக் கருதப்படும் எந்தப் பொருள்களுக்கும் புலிகளால் 25சதவீத வரி அறவிடப்படுவதில்லை என்பதை வலியுறுத்திக் கூறுகின்றேன்.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி. பளையில் உள்ள வருவாய்த்துறைச் செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

புலிகள் தீர்வை விதிக்கும் பொருளகள் தொடர்பான பட்டியலையும் அவர் அங்கு வெளியிட்டார்.

இந்த விடயம் குறித்து அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டுக்கும் வன்னிக்கும் எடுத்துவரப்படும் பொருள்களுக்கு எமது கட்டுப்பாட்டுப் பகுதியின் நுழைவாயில்களான புளியங்குளத்திலும் உயிலங்குளத்திலும் வைத்து தீர்வை விதிக்கின்றோம். அதன் பிறகு எந்த இடத்திலும் தீர்வை விதிப்பதில்லை.

புளியங்குளம், உயிலங்குளம் ஆகிய நுழைவாயில்களில் வைத்து வர்த்தகர்கள் எடுத்து வரும் பொருள்களின் கொள்முதல் விலைக்கே (மொத்தவிலை) தீர்வை அறவிடப்படுகின்றது. எந்தப் பொருளுக்கும் அதன சில்லறை விலைக்குத் தீர்வை அறவிடப்படுவதில்லை.

அந்தத் தீர்வையுடன் தமது போக்குவரத்து மற்றும் இதர செலவுகளையும் இலாபத்தையும் சேர்த்தே மொத்த வர்த்தகர்கள் சில்லறை வர்த்தகர்களுக்குப் பொருள்களை விற்கின்றார்கள்.

அவ்வாறு வாங்கப்படும் பொருள்களுக்குத் தமது இதர செலவு மற்றும் இலாபத்தை வைத்து அவர்கள் விற்பதே நியாயமானதாகும். ஆனால்,

(12ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுப்பாட்டு விலைகள் விரைவில் வெளியாகும்!

விடுதலைப் புலிகளின் தீர்வையின் பெயரால் பொருள்களின் விலைகள் அதிகளவில் கூட்டி விற்கப்படுவதை அடுத்து பொருள்களுக்கான கட்டுப்பாட்டு விலைகளை அறிவிப்பது குறித்து நாம் தீவிரமாகச் சிந்தித்து வருகின்றோம்.

நேற்றைய செய்தியாளர் சந்திப்பின்போது நிதித்துறைப் பொறுப்பா

(12ஆம் பக்கம் பார்க்க)

பொருள்களுக்கு புலிகளால் அறவிடப்படும் தீர்வை பற்றிய முழு விவரம் 5ஆம் பக்கத்தில்.

# தீவக சம்பவத்தைக் கண்டித்து

# வியாழனன்று யாழ்நகரில் பேரணி

## வெகுஜன ஒன்றிய ஏற்பாட்டில் நடக்கும்

யாழ்ப்பாணம்,ஜூன்25

**விடுதலைப் புலிகளின் தீவகப் பொறுப்பாளர் செம்மணன் மற்றும் துணைப்பொறுப்பாளர் தயாளன் ஆகியோர் கடந்த 20ஆம் திகதி வேலணையில் வைத்துத் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நாளைமறுதினம் வியாழக்கிழமை மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று யாழ்நகரில் இடம்பெறவுள்ளது.**

**யாழ். வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்தப் பேரணி இடம்பெறும்.**

இந்தப் பேரணி தொடர்பாக ஒன்றியம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நிராயுதபாணிகளாக நின்று சமாதானத்துக்காக அரசியல் பணி செய்த விடுதலைப் புலிகளின் தீவகப் பொறுப்பாளர் செம்மணன் மற்றும் துணைப் பொறுப்பாளர் தயாளன் ஆகியோர் மீது நடத்தப்பட்ட தாக்குதலையும் கொலை முயற்சியையும் கண்டித்து, நீதிக்காகவும் நிரந்தர சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்குமான கண்டனப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாளைமறுதினம் காலை 10 மணிக்கு இந்தப் பேரணி ஆரம்பமாகும். இந்தப் பேரணி தொடர்பான விவரங்கள் பின்னர் வெளியிடப்படும்.

இந்தப் பேரணியில் அனைத்து மக்களையும் பற்கேற்குமாறு வேண்டுகிறோம் - என்றுள்ளது.

(ம-3)

பாதுகாப்பு அமைச்சர் கூறுகின்றார்

## யுத்தநிலை ஏற்படுமானால் எதிர்கொள்ள நாம் தயார்

### அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன

கொழும்பு,ஜூன்25

சமாதானச் செயற்பாடுகள் குறித்து புரிந்துணர்வுடனும் பொறுமையுடனும் செயற்படுகிறோம் அதேவேளை, பயிற்சி, ஆள்திரட்டல் ஆகியவற்றை மேற்கொண்டு யுத்தநிலைமை ஏற்பட்டால் முகம்கொடுக்க தயாராக இருக்கவும் நடவடிக்கை எடுக்கின்றோம்.

- இவ்வாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன கூறினார்.

தியத்தலாவை விமானப் படைப் பயிற்சி முகாமில் பயிற்சி பெற்று வெளியேறிய படையினரின் அணிவகுப்பு மரியாதை நிகழ்ச்சியின்போது அமைச்சர் உரையாற்றினார்.

சமாதானத்தை எதிர்பார்த்து நாம் எமது இராணுவ நடவடிக்கைகளை முடக்கி வைக்கவேண்டியதில்லை. அவ்வாறே யுத்தநிறுத்தத்தையும் மீறக்கூடாது.

பாதுகாப்புப் படைகளுக்கு அரசாங்கம் முடிந்தளவு வசதிகளை வழங்குகிறது. அவை போதுமானவை அல்ல என்பது எமக்கு விளங்கியி

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்குளியில் பொலீஸார் அட்டகாசம்!

இரவுநேரம் பொலீஸார் வீடுகளுக்குள் புகுந்து அட்டகாசம். குழந்தைகள், சிறுவர்கள் என்ற வயது வித்தியாசம் இன்றி ஆண்கள், பெண்கள் எல்லோருக்கும் அடி, உதை. வீடுகளில் இருந்த பொருள்கள் அடித்து நொறுக்கப்பட்டன.

இந்தப் பயங்கரம் வேறெங்கும் இல்லை. தலைநகர் கொழும்பிலே நடந்தது. நேற்றுமுன்தினம் இரவு தமிழ்மக்கள் பெரும் எண்ணிக்கையில் வாழும் மட்டக்குளி, கதிரானவத்தை என்ற இடத்திலுள்ள வீடுகளில் புகுந்த பொலீஸாரே இவ்வாறு அமளி துமளிப்படுத்தினர்.

சம்பவம் பற்றி யோகராஜன் எம்.பி.பொலீஸ் நிலையம் சென்று நிலையப் பொறுப்பதிகாரியோடு பேசினார். அத்தோடு பதில் பொலீஸ் மா அதிபர் ஆனந்தராஜவுக்கும் முறைப்பாடு செய்தார். அவற்றையடுத்து பயங்கர நிலை நீங்கியது; பதற்றம் தணிந்தது.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது:- நேற்றுமுன்தினம் மாலை 4மணி

(12ஆம் பக்கம் பார்க்க)

## நயினாதீவில் கஞ்சா விற்றவர் வசமாக மாட்டினார்!

யாழ்ப்பாணம்,ஜூன்25

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய் தீர்த்த உற்சவத்தில் பங்குபற்றிய பக்தர்கள் மத்தியில் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் ஒருவர் வசமாக மாட்டிக் கொண்டார்.

கற்பூரப் பெட்டியில் வைத்துக் கடத்திவந்த கஞ்சாவை கற்பூரம் விற்பனை செய்வது போன்று இந்த நபர் விற்றுக்கொண்டிருந்தார் என்றும் -

நயினாதீவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் கிராம அலுவலர்களான இ.குலசிங்கம், கா.சிவஞானம் ஆகியோர் இந்த நபரை மடக்கிப்

(12ஆம் பக்கம் பார்க்க)

புலிகள் மீதான தாக்குதலைக் கண்டித்து

## திருமலையில் இன்று ஹர்த்தால் கண்டனப் பேரணிக்கு ஏற்பாடு

திருகோணமலை,ஜூன்25

திருகோணமலையில் இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுவதோடு கண்டன ஊர்வலமும் நடத்தப்படும்.

யாழ் தீவுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் தாக்கப்பட்டதற்கும் மூதூரில் புலிகளின் அலுவலகம் உடைத்து சேதப்படுத்தப்பட்டதற்கும் ஆட்சேபம் தெரிவித்தே இவை மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

திருமலை மாவட்ட சமாதான விரும்பிகள் ஏற்பாடு செய்திருக்கும் ஹர்த்தாலுக்கு ஆதரவாக கடைகளைப் பூட்டவும் பாடசாலைகளைப் பகிஷ்கரிக்கவும் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

இன்றைய சமாதானச் சூழலில் விடுதலைப் புலிகளை அவமதிப்பது ஒட்டுமொத்தமாக தமிழ் சமூகத்தையே அவமதிப்பதாகும் என்றும் இரண்டு இடங்களிலும் நடைபெற்ற சம்பவங்களுக்கு அதிருப்தியைத் தெரிவிக்க தமிழ்மக்கள் ஒன்றுதிரளவேண்டும் என்றும் சமாதான விரும்பிகள் விடுத்திருக்கும் ஹர்த்தால் அழைப்பில்

(12ஆம் பக்கம் பார்க்க)

வன்னியில் புலிகள் மீட்டெடுத்த

## 50 மெற்றிக்தொன் வெடிபொருள்கள் ஆனையிறவில் வைத்து அழிக்கப்படும்!

கிளிநொச்சி,ஜூன்25

வன்னியில் கடந்த காலத்தில் மீட்கப்பட்ட 50மெற்றிக்தொன் நிறையுடைய வெடிப் பொருள்களை இந்த வார இறுதியில் ஆனையிறவில் வைத்து அழிப்பதற்கு விடுதலைப் புலிகளின் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் குழு ஏற்பாடு செய்துள்ளது.

மிதிவெடிகள், விமானத்திலிருந்து வீசப்பட்டு வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டுள்ள குண்டுகள் மற்றும் பொறிவெடிகள் என்பனவே அழிக்கப்படவுள்ளன.

சர்வதேச அமைப்பு ஒன்றின் பிரதிநிதியின் முன்னிலையில் இந்த அழிப்பு நடவடிக்கையை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

பூரண பாதுகாப்புடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வெவ்வேறு வகையான சுமார் ஆயிரம் வெடிபொருள்கள் கொண்ட இந்தத் தொகுதி 50 மெற்றிக் தொன் நிறை உடையது என்று மனித நேய கண்ணிவெடி அகற்றும் குழுவின் பொறுப்பாளர் யோகன் தெரிவித்தார்.

(ஐ-3)

# அகதிகளை அழைப்பது பற்றி ஆராய அமைச்சர் ஜயலத் தமிழகம் செல்கிறார்

கொழும்பு,ஜூன்25

தமிழகத்தில் தங்கியுள்ள ஈழ அகதிகள் நிலை குறித்து நேரில் ஆராய்வதற்காக புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன இன்று தமிழகம் செல்கிறார்.

தமிழகத்தில் நூற்றிப் பதினொரு முகாம்களிலும் மற்றும் நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ள சுமார் 2லட்சம் அகதிகளின் நிலைமை தொடர்பாக அங்கு ஆராயவிருப்பதாகவும்-

தாயகம் திரும்ப விரும்புபவர்களுக்கு போக்குவரத்து வசதிகள் வழங்குவது தொடர்பாக தமிழக அதிகாரிகளுடன் பேசவிருப்பதாகவும் -

அமைச்சர் ஜயலத் தெரிவித்தார்.

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மற்றும் அவரது அமைச்சர்கள், பொலீஸ் மா அதிபர், படை அதிகாரிகள், குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் ஆகியோரையும் சந்திக்க விருப்பதாகவும் -

சில முகாம்களுக்கு நேரடியாகச் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராயவிருப்பதாகவும் -

அமைச்சர் மேலும் கூறினார்.

ஏற்கனவே அங்கு சென்றுள்ள பதிவாளர் நாயகம் அலுவலக அதிகாரிகள், குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் மூலம் அகதி முகாம்களில் உள்ளவர்களுக்கு பிறப்பு, விவாகச் சான்றிதழ்கள், கடவுச்சீட்டுக்கள் வழங்கப் படவிருக்கின்றன. சட்டவிரோதமாக அகதிகள் இலங்கை திரும்புவதைத் தவிர்க்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கவிருக்கின்றோம்.

அகதிகள் பாதுகாப்பாக இலங்கை திரும்புவது தொடர்பான நடவடிக்கைகள் தொடர்பாக அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அதிகாரிகளுடன் கலந்துரையாடப்படும்.

- இவ்வாறு அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ-3)

# ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக ஆஸி.நாடாளுமன்றில் பிரேரணை

## அந்த நாட்டு எம்.பி. சமர்ப்பிப்பு

சிட்னி,ஜூன்25

ஆஸ்திரேலியாவில் கடந்த சனிக்கிழமை உணர்சிபூர்வமாக நடந்த 'பொங்குதமிழ்' நிகழ்வு ஈழத் தமிழர்களுக்கு வசதியாக அமைந்தது. ஆஸ்திரேலியாவின் போவேட் பகுதி எம்.பி. ஜோன் மேர்பி, ஈழத்தமிழர்களின் தமிழத்தேசியம், தாயகம், சுயர் நிர்ணயம் ஆகிய மூன்று அடிப்படை உரிமைக் கோரிக்கைகளுக்கும் ஆதரவு தெரிவித்து நாடாளுமன்றத்தில் பிரேரணை சமர்ப்பித்தார்.

ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் வெஸ்ட்மெட் என்ற இடத்தில் சுதீன் மக்கோலி கல்லூரியில் கடந்த சனிக்கிழமை 'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வு நடந்தது. அதில் தமிழர்களும் ஆஸ்திரேலியர்களும் மற்றும் பல்வேறு நாட்டவர்களும் என இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் செய்யப்பட்ட 'பொங்கு தமிழ்' பிரகடனத்தில் சமாதான முன்னெடுப்புகளுக்கு வரவேற்புத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை அரசிடம் சில கோரிக்கைகளும் விடுக்கப்பட்டன.

★ நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கவேண்டும்.

★ புரிந்துணர்வு உடன்படிக்கையை பூரணமாக நடைமுறைப்படுத்தவேண்டும்

★ புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும்.

★ நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு தமிழ் மக்களின் தமிழ்த் தேசியம், தாயகம், சுய நிர்ணயம் ஆகிய அடிப்படை உரிமைக் கோரிக்கைகளை உள்ளடக்கிய தீர்வைத் தரவேண்டும்.

- இப்படிப் பிரகடனத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

ஆஸ்திரேலிய எம்.பி. ஜோன் மேர்பி நாடாளுமன்றத்தில் தாம் சமர்பித்துள்ள பிரேரணையில் குறிப்பிட்டிருப்பதாவது:-

புலிகளுடன் செய்துகொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்து அரசாங்கம் -

★ இடம்பெயர்ந்தோர் மீளக்குடியமர்வதற்கு வசதியாக பாதுகாப்புப் படையினரை அவர்கள் இப்போது முகாமிட்டிருக்கும் பகுதிகளிலிருந்து விலக்கிக்கொள்ளவேண்டும்.

★ புலிகளின் தடையை நீக்கி அவர்கள் சமத்துவமாக இருந்து அரசுடன் பேசுவதற்கான சட்ட உரிமையை அவர்களுக்கு வழங்கவேண்டும்

★ அரசியல் பேச்சு நடத்தும் அதேவேளையில், போரினால் அழிவுற்ற தமிழ் தாயகத்தைக் கட்டி எழுப்புவதற்கு வசதியாக இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தவேண்டும்.

★ பேச்சுக்களை நடத்தி தமிழ் மக்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் அடிப்படையான தமிழ்த் தேசியம், தாயகம், சுயநிர்ணயம் ஆகியவற்றை உள்ளடக்கிய தீர்வை எட்ட வேண்டும்.

- இப்படி அவர் தமது நாடாளுமன்றப் பிரேரணையில் குறிப்பிட்டிருக்கிறார். (ம)

# ஆஸி. தலைமை நீதியரசர் ஓகஸ்டில் இங்கு விஜயம்

ஆஸ்திரேலிய உயர் நீதிமன்ற தலைமை நீதியரசரும் சர்வதேச ஜூரிமார் சங்க உப தலைவருமான மாக்கல் அயன்பீட்டின் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இலங்கைக்கு வரவிருக்கிறார். அவர் வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கும் மலையகத்துக்கும் விஜயம் செய்வார்.

ஆஸ்திரேலியா சென்றிருக்கும் மலைய மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன், நீதியரசர் அயன்பீட்டினை சந்தித்து உரையாடினார். வடக்கு - கிழக்கு தமிழ்மக்களினதும் மலையக மக்களினதும் பிரச்சினைகள் குறித்து அறிந்துகொண்டதை அடுத்தே அயன்பீட்டின் இலங்கை வரவிருக்கிறார். நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்முடன் தொடர்பு கொண்ட பின்னர் அவர் இலங்கை வருவார்.

இலங்கை விஜயத்தின்போது மலையக் கல்விமான்களை அவர் சந்திக்க அமைச்சர் சந்திரசேகரன் ஏற்பாடு செய்யவிருக்கிறார். (ஐ)

# விளையாட்டுச் செய்திகள்

யாழ்ப்பாணம்,ஜூன்25

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கம் வடமராட்சிக்குட்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்தி வரும் 'ரொப் ரென்' உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை கொற்றாவத்தை றேஞ்சஸ் வி.க. மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விபரம் வருமாறு:

★ பி.ப. 4 மணி கொற்றாவத்தை சிவானந்தா வி.கழகம் எதிர் அல்வாய் மனோகரா வி.கழகம்

★ பி.ப. 5மணி நவிண்டில் கலைமதி வி.கழகம் எதிர் பருத்தித்துறை ஐக்கிய வி.கழகம். (ம-ரி)

★ ★ ★

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை யாழ்.மாவட்ட ரீதியில் ஆண்,பெண் இருபாலாருக்குமான கரம் ஒற்றையர், இரட்டையர் கலப்பு ஆட்டங்களை நடத்தவுள்ளது.

போட்டிகளில் பங்கு பற்றவிரும்பும் போட்டியாளர்கள் விண்ணப்பங்களை உடற்கல்வியலகில் பெற்று எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறும் வேண்டப்பட்டுள்ளது. (ம-ரி)

★ ★ ★

இலங்கை வங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ் மாவட்ட தாச்சிச் சங்கத்தினரால் நடத்தப்பட்டு வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 4மணிக்கு கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுற்ற இரண்டாம் சுற்று ஆட்டத்தில் சங்குவேலி ஸ்ரீ அம்பாள் வி.கவை எதிர்த்து ஆலடி சிந்து வி.க. மோதவுள்ளது. (ம-ரி)

★ ★ ★

மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் ஞாபகார்த்தமாக யுத்கார்மல் வி.கழகம் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும், பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை குருநகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

பி.ப. 3.30 மணிக்கு நடைபெறவுள்ள மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் ஊரெழு றோயல் வி.கவும், சென்.றோக்ஸ் வி.கவும் பங்குபற்றுகின்றன.

4.30மணிக்கு நடைபெறும் இறுதியாட்டத்தில் சென்.அன்ரனீஸ் வி.கவும் சென். நீக்கலஸ் வி.கவும் மோதவுள்ளன. (ம-ரி)

★ ★ ★

மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பி.ப. 2.30 மணிக்கு அதிபர் அ.நடராஜா தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வி.பசுபதிப்பிள்ளை, லயன்ஸ் கழக மாவட்டப் பிராந்திய இணைப்பாளர் எஸ்.கே.தங்கராசா ஆகியோரும் கலந்துகொள்வர். (ம-ரி-29)

### அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்25

வலி.கிழக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அனைத்து சனசமூக நிலையங்களுக்குமான அவசர கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2மணிக்கு நீர்வேலிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெறும்.

சகல சனசமூக நிலைய நிர்வாகத்தினரையும் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு வலி. கிழக்கு சனசமூக நிலையங்களின சம்மேளனமும், வெகுஜன அமைப்புகளின் ஒன்றியமும் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ம)

### பொசன் உற்சவங்களில் 10லட்சம் பொதுமக்கள்

அனுராதபுரத்திலும் மிகிந்தலையிலும் நேற்று பொசன் உற்சவத்துக்காக 10லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் திரண்டிருந்தனர். பொலன்னறுவை, கதிர்காமம், களனி, கண்டி ஆகிய இடங்களிலும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டிருந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது. யாழ்ப்பாணத்திலும் பொசன் தினத்தை முன்னிட்டு படையினர் பொதுமக்களுக்குக் குளிர்பானங்களை வழங்கினர். (ம)

### காரைதீவில் புலிகளின் அலுவலகம் திறப்பு

காரைதீவு,ஜூன்25

காரைதீவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகத்தை நேற்று திங்கட்கிழமை அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பாவா திறந்து வைத்தார்.

விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட இராணுவத் தளபதி எப்ராஸ்லி புலிக்கொடியை ஏற்றி வைத்ததும் ஒருநிமிட நேரம் அகவணக்கம் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் தமிழீழ நீதிமன்ற நீதிபதி வ.பிரபுராஜா பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்துவைத்தார். விடுதலைப் புலிகளின் பிரமுகர் வெ.ஜெயகோபன் நிகழ்ச்சியை தலைமை வகித்து நடத்திவைத்தார்.

காரைதீவுப் பிரதேசப் பொறுப்பாளர் என்.தங்கவேல் உட்படப் பலர் சிறப்புரை நிகழ்த்தினர். அம்பாறை மாவட்டத்தின் நான்காவது அரசியல் அலுவலகம் இதுவாகும். (ஐ)

ஜப்பான் தென்கொரியா

## உலகக் கிண்ண கால்பந்து

2002 FIFA WORLD CUP KOREA JAPAN

31.05.2002 - 30.06.2002



தீவிர பயிற்சியில் தென்கொரிய அணி வீரர்கள்

# இன்றைய அரையிறுதியில் கொரியா-ஜேர்மனி மோதல்

சியோல்,ஜூன்25

ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றன. இன்றைய ஆட்டத்தில் ஜேர்மனி மற்றும் தென்கொரிய அணிகள் மோதுக்கின்றன.

ஏற்கனவே இரு முறை உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய அணி ஜேர்மனி. தென்கொரியா இம்முறையே முதற்றடவையாக அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெற்றுள்ளது. எனினும் இரு அணிகளும் சமபலமுள்ளவை என்றே கணிக்கப்படுகின்றன. ஜேர்மனிய வீரர்கள் வேகமாக முன்னேறிச் சென்று தாக்குதல் ஆட்டம் நடத்துவதில் வல்லவர்கள். தென்கொரிய வீரர்கள் தற்காப்பு ஆட்டத்தில் பலமாக இருக்கிறார்கள். அவர்களின் தடையைத் தாண்டி பந்தைக் கோல்கம்பங்கள் நோக்கிக் கொண்டு செல்வது கடினம்.

ஆனால் தென்கொரியாவை அச்சுறுத்தும் ஒரே வீரராக ஜேர்மனியின் கோல்ஸ் இருக்கிறார். இவரது பலம் தலையால் மோதி கோல் அடிப்பது. இதுவரை நடந்த ஆட்டங்களில் அவர்



கோல்ஸ்

ஐந்து கோல்களை அடித்துள்ளார். அந்த ஐந்து கோல்களையுமே அவர் தலையால் மோதித்தான் அடித்தார் என்பதே இங்கு முக்கியமானது. 'கோணரில்' இருந்து உயர்ந்து வரும் பந்தை உயரே எம்பி தலையால் மோதுவதில் அவர் வல்லவர். அதனைத் தடுப்பதற்கு தகுந்த வியூகத்தை தென்கொரியர்கள் அமைக்கவில்லையெனின் ஜேர்மனியர்கள் கோல் அடிப்பதை அவர்களால் தடுக்க முடியாமல் போகலாம். ஆனால் இப்போட்டியில் எப்படியாவது வென்றுவிட வேண்டும் என்ற வெறியுடன் ஜேர்மனி இருக்கின்றது.

அதேசமயம் தென்கொரியாவின் முன்கள வீரரான ஆன் ஜுங் ஹவான் முன்னேறிச் சென்று திடீர்த் தாக்குதல் நடத்துவதில் கைதேர்ந்தவராக இருக்கிறார். அவர் அடித்த பொன் கோல் மூலமே இத்தாலியுடனான போட்டியில் வெற்றி பெற்று கால்இறுதிக்குத் தகுதி பெற்றது தென்கொரியா.

ஜேர்மனியின் முன்னணி வீரரான இடைநிலை ஆட்டக்காரர் பிக்மர் ஹமான் பயிற்சியின் போது ஏற்பட்ட காயம் காரணமாக இன்றைய அரையிறுதியில் ஆடமாட்டார் என்பது அந்த அணிக்குச் சிறிய பாதிப்பை ஏற்படுத்தும். ஆனாலும் ஜேர்மனி பலமிக்க அணியாகவே உள்ளது. எனினும் இத்தாலி, போர்த்துக்கல், ஸ்பெயின் போன்ற பலம்மிக்க அணிகளைத் தோற்கடித்து அரையிறுதிக்கு முன்னேறியுள்ள தென்கொரியாவை அது இலகுவில் வெல்லுமா என்பது கேள்விக்குரியது. இன்று மாலை இதற்கான விடை தெரிந்துவிடும்.

நாளை நடைபெறும் மற்றோர் அரையிறுதி ஆட்டத்தில் பிரேஸில் அணியை எதிர்த்து துருக்கி அணி ஆடுகின்றது. இந்த ஆட்டத்தில் பிரேஸில் வெற்றிபெறுவதற்கான சாத்தியங்கள் அதிகம் உள்ளன. ஏற்கனவே முதற்சுற்று 'லீக்' ஆட்டங்களில் பிரேஸில் துருக்கியை வெற்றி கொண்டுள்ளது. எனவே பிரேஸில் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறுவது உறுதியானது என்றே பொதுவாக எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால், அந்த அணின் முன்கள வீரரான ரொனால்டினோ அரையிறுதி ஆட்டத்தில் ஆடமாட்டார் என்பது ஓர் இழப்பு. இவர் பந்துடன் வேகமாக முன்னேறி கோல் அடிப்பதற்கு ஏதுவாக சக வீரர்களுக்கு பந்தைத் தட்டிக் கொடுப்பதில் வல்லவர். அது தவிர நீண்டதூரத்தில் இருந்து கட்டுப்பாடற்ற உதைகள் மூலம் கோல் அடிப்பதிலும் வல்லவர். இதுவரை அவ்வாறு இரு கோல்களை அவர் அடித்துள்ளார்.

எது எப்படியிருப்பினும் இறுதிப் போட்டியில் ஆடும் அணிகள் பற்றிய விவரம் நாளை மாலை தெரிந்து விடும். (ம)



பயிற்சியில் ஈடுபட்டுள்ள ஜேர்மன் வீரர்கள் மத்தியில் பயிற்சியாளர்

உதயன்

# இந்த ஏமாற்றுகள் எவ்வளவு காலத்துக்கு?

மக்கள் சேவைக்கே அரசியல் கட்சிகளும் தலைவர்களும் என்ற நிலை தமிழ் பேசும் மக்களைப் பொறுத்த வரையில் இன்று முற்றாக மாறிவிட்டது.

பதவிகளுக்காகவே கட்சிகளும் தலைவர்களும் என்ற நிலை வந்துவிட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராகவும் அந்தக் கட்சியின் நியமனப் பட்டியல் எம்.பியாகவும் இருந்த மு.சிவசிதம்பரம் கடந்த 5 ஆம் திகதி மறைந்து விட்டார்.

அன்றிலிருந்து சுமார் இரண்டுவார காலமாகத் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆக்கிரமித்திருந்த பிரச்சினை, கூட்டணியின் அடுத்த தலைவர் யார்? சிரேஷ்ட உப தலைவருக்கு அந்தப் பதவி கிடைக்குமா? அவருக்கு அந்தப் பதவி கிடைத்தால் அவர் வகிக்கும் சிரேஷ்ட உப தலைவர் பதவிக்கு யார்? எல்லோரும் இதே சிந்தனையாக இருந்தனர்.

கூட்டணிப் பட்டியல் எம்.பி.பதவி பூதாகாரமான பிரச்சினையாகிவிட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணியோடு இணைந்து தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பை அமைத்துள்ள மற்றும் மூன்று கட்சிகளையும் சேர்ந்தவர்கள் கூட அந்தப் பதவிக்கு ஆசைப்பட்டு அதை அடைய எவ்வளவோ பிரயத்தனம் செய்தார்கள்.

அதனால் கூட்டமைப்புக்குள்ளேயே போராட்டம் ஆரம்பமாகிவிட்டது.

கூட்டணி விட்டுக் கொடுக்கவில்லை. அந்தப் பதவி தமிழர் விடுதலைக் கூட்டணிக்கே உரியது என்று பிடிவாதமாக நின்றுவிட்டது. மற்றக் கட்சிகள் பின்வாங்க வேண்டியதாயிற்று.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் உள்ள எவரை நியமனப் பட்டியல் எம்.பியாக்குவது? அதில் உள் போராட்டம் வேறு.

அந்தப் பதவிக்கு கட்சியின் முக்கியஸ்தர் ஒருவரால் முன்நிறுத்தப்பட்ட முதியவர் தம்முடைய நியமனத்திற்கு எதிர்ப்பு இருப்பதை அறிந்ததும் தம்மை ஒரு சில மாதங்களுக்காவது எம்.பியாக்குங்கள் என்று மன்றாடினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியும் குறுகிய காலங்களுக்கு சுழற்சி முறையில் வெவ்வேறு நபர்களை நியமனப் பட்டியல் எம்.பியாக்கி எல்லோருக்கும் சந்தர்ப்பம் வழங்கலாம் என்ற கருத்திலேயே இன்னமும் இருக்கிறது.

எம்.பி.பதவி மக்கள் சேவைக்காக என்றால் சுழற்சி முறையில் குறுகிய காலத்திற்கு எம்.பியாக இருக்கும் ஒருவரால் என்ன சேவையை செய்ய முடியும்?

அரசியல் பலருக்கும் பிழைப்புக்கு வழியாகி விட்டது. பெயர், புகழ், பணம், வெளிநாட்டுப் பயணங்கள், கார், ரெலிபோன் வசதிகள், சொகுசு வாழ்க்கை இவற்றுக்காகவே எம்.பியாக விட வேண்டும் என்று தலைவர் வரிசையில் தம்மை வைத்துக்கொள்ளுபவர்கள் துடியாய்த் துடிக்கிறார்கள்.

மற்றப்படி மக்கள் எக்கேடு கெட்டாலும் அவர்களுக்கு அதைப்பற்றிக் கவலையில்லை.

இந்தப் பதவிப் பிரச்சினைகளில் கூட்டணியும் கூட்டமைப்பின் மற்றக் கட்சிகளும் மூழ்கிப் போயிருந்த வேளையில்தான் தீவுப் பகுதியில் உள்ள வேலணையில் புலிகள் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்பட்டார்கள். மூதூரில் புலிகளின் அலுவலகம் அடித்து நொறுக்கப்பட்டது.

இவையெல்லாம் அப்போது தலைவர்களுக்கு பெரிதாகத் தெரியவில்லை. பதவி நியமனங்களைச் செய்துவிட்டு ஆறுதலாக இருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை தாக்குதல் சம்பவங்களுக்கு கண்டன அறிக்கை விட்டிருக்கிறார்கள்.

தேர்தலில் தாங்களே வாக்குப் போட்டு தங்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்த இவர்களை ஓரங்கட்டிவிட்டு பதவியெதுவும் வகிக்காமல் புலிகள் ஆற்றிவரும் வரும் சேவையை மதித்து அவர்களே தமது ஏக பிரதிநிதிகள் என்கிறார்கள் தமிழ் மக்கள். இந்தத் தலைவர்களும் வேறு வழியின்றி ஆமாப் போட்டு காலம் தள்ளுகிறார்கள். இந்த ஏமாற்றுக்கள் எல்லாம் எவ்வளவு காலத்துக்கு?

## அதிபர், ஆசிரியர் இடமாற்றம் இனி அடுத்த ஆண்டு ஜனவரியில்

இவ்வருடத்துக்கான சகல ஆசிரியர், அதிபர் இடமாற்றங்களும் கடந்த 16ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் க.சண்முகலிங்கம் வடக்குக் கிழக்கு மாகாணத்திலுள்ள சகல மாகாண, வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இந்த இடமாற்றங்கள் யாவும் அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதியில் இருந்தே ஆசிரியர் இடமாற்றச் சபை மூலம் செயற்படுத்தப்படும். அதற்கமைய இடமாற்றச் சபையின் தலைவர், செயலாளர், உறுப்பினர் விபரங்களை தமக்கு அறிவித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளுமாறும் -

இடமாற்றச் சபையின் சிபார்சு இன்றி ஆசிரியர், அதிபர் இடமாற்றங்களை செய்ய வேண்டாமெனவும் -

சகல வலய, மாகாண கல்விப்பணிப்பாளர்களையும் அவர் கேட்டுள்ளார். (ஒ-4)




### வன்னியைவிட இங்கு பெற்றோல் விலை அதிகம்

# தரைவழியே எரிபொருள்களை எடுத்துவர இன்னுமேன் தயக்கம்?

## குடாநாட்டு மக்கள் கேள்வி

வலி.வடக்கு,ஜூன்25

வன்னிப் பிரதேசத்தில் பெற்றோல் உட்பட எரிபொருள்களின் விலை குறைந்துள்ள நிலையிலும், யாழ். மாவட்டத்தில் எரிபொருள் விலைகள் நாட்டின் பிறபாகங்களைவிட அதிகமாக விற்கப்படுவது குறித்து பொதுமக்கள் மத்தியில் கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. தரைப்பாதை திறக்கப்பட்ட பின்னர் குடாநாட்டுக்கு தரை வழியாக எரிபொருள்களை எடுத்து வர அனுமதி வழங்கப்பட்டுவிட்ட போதிலும், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.அலுவலக அதிகாரிகளின் மெத்தனத்தாலேயே தரை வழியாக எரிபொருள் எடுத்துவரப்படாது இருப்பதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வன்னிப் பகுதியில் ஒரு லீற்றர் பெற்றோல் 80 ரூபாவுக்கு பெறக் கூடியதாக இருக்கின்றபோதிலும், யாழ்.மாவட்டத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கூட ஒரு லீற்றர் பெற்றோல் 81 ரூபாவாகவே விற்பனை செய்யப்பட்டு வருவதாக வன்னியிலிருந்து வருபவர்கள் கூறுவது குடாநாட்டு மக்களின் விசனத்தை அதிகரித்துள்ளது.

கடந்த 7 வருடங்களாக கப்பல் மூலம் எரிபொருள்கள் எடுத்து வரப் பட்டபோது, கப்பல் காப்புறுதி உட்பட பல காரணங்களைப் பட்டியலிட்ட பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பிற மாவட்டங்களைவிட அதிக விலையிலேயே எரிபொருள்களை யாழ். மாவட்டத்தில் விநியோகித்து வருகிறது.

ஆனால் தற்போது ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னரும் - குண்டூசி முதல் மின்சார சபையின் மின்பிறப்பாக்கிகள்வரை அப்பாதை வழியாக குடாநாட்டுக்கு வரும் நிலையிலும் - எரிபொருள்களை மட்டும் தரைப்பாதை வழியாக எடுத்துவர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளாதது ஏன்0என பொதுமக்கள் தற்போது கேள்வி எழுப்பத் தொடங்கியுள்ளனர். (ஒ-86)

## வெளியிடங்களிலிருந்து வருபவர் தங்கும் வீடுகளே திருடர் இலக்கு!

யாழ்ப்பாணம்,ஜூன்25

வெளிநாடுகளில் அல்லது தென்னிலங்கையில் இருந்து வருபவர்கள் தங்கும் வீடுகளையே திருடர்கள் அதிகம் குறிவைப்பதாகக் கூறப்படுகிறது.

தற்போது சமாதானச் சூழ்நிலை நிலவுவதால், வெளிநாடுகளிலிருந்தும், தென்னிலங்கையில் இருந்தும் தமது உற்றார் உறவினர்களைப் பார்ப்பதற்காக ஏராளமானவர்கள் குடாநாட்டுக்கு வரத்தொடங்கியுள்ளனர். தமது உறவினர் வீடுகளில் அவர்கள் தங்குகின்றனர். நீண்டகாலத்தின் பின்னர் வரும் அவர்கள் விலை உயர்ந்த பொருள்களை எடுத்து வருவதாக நம்பப்படுகிறது.

இவற்றைக் குறிவைத்தே இவர்கள் தங்கும் வீடுகளைத் திருடர்கள் குறிவைப்பதாகக் கருதப்படுகிறது.

வெளியிடங்களில் இருந்து வருபவர்கள் கோயில் மற்றும் விசேட நிகழ்ச்சிகள் போன்றவற்றுக்கும் செல்லும் போதும், சுற்றுலா செல்லும் போதும் வீட்டில் உள்ள அனைவரையும் அழைத்துக் கொண்டு வீட்டைப் பூட்டிவிட்டு செல்கின்றனர். இதனைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தியே திருடர்கள் தமது கைவரிசையை காட்டி வருகின்றனர்.

ஆகவே வீடுகளுக்கு தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துவிட்டுச் சென்றால் திருட்டுக்கள் நடப்பதைத் தடுக்கலாம். (ஒ-180)

## பளையில் ஈக்கள் அதிகரிப்பு இதனால் நோய்பரவும் அச்சம்

யாழ்ப்பாணம்,ஜூன்25

பொதுமக்கள் மீளக்குடியேறத் தொடங்கியுள்ள பளைப் பகுதியில் இலையான்கள் பெருகியுள்ளதால் அங்கு தொற்று நோய்கள் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

நீண்டகால இடைவெளியின் பினனர் பளைப்பகுதியில் மக்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளது. தென்பகுதியில் இருந்து வருவோர் முகமாலையில் சோதனைச் சாவடி மூடப்பட்டதும் இரவு நேரங்களில் பளையிலேயே தங்கி மறுநாள் யாழ்ப்பாணம் வருகின்றனர்.

அங்கு இரவு தங்கிச் செல்பவர்களால் கைவிடப்படும் கழிவுப் பொருள்கள் காரணமாக அப்பகுதியில் உள்ள சிற்றுண்டிச்சாலைகள் உட்பட பல இடங்களிலும் இலையான்கள பெருகியுள்ளன.

தொற்று நோய்களை துரிதமாகக் காவிச்செல்லும் இந்த இலையான்கள் மூலம் வயிற்றோட்டம் உட்பட பல தொற்று நோய்கள் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை -

சுகாதார சேவைகளுடன் தொடர்புடைய பல அதிகாரிகள் தினசரி இந்தப் பகுதியை கடந்து தமது பயணங்களை மேற்கொண்டு வருகின்ற போதும் இந்த விடயத்தில் அவர்கள் அசிரத்தை காட்டிவருவதாகவும் பொதுமக்கள் குறை கூறினர். (ஒ-6)

### நாளை

ஆனி 12
புதன்கிழமை
(26.06.2002)
திதி : துதியை
பின்னிரவு 3.20 வரை.
நட்சத்திரம்: பூராடம்
நண்பகல் 11.44 வரை.
சுபநேரம்: 4.25 - 5.55
ராகுகாலம்: 11.55 - 1.25
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உண்மையான அறிவாளி பிறரைத் தாழ்மையாக எண்ணுவதில்லை.

## நாகர்கோவிலைச் சேர்ந்தோர் தமது வீடுகளைப் பார்க்க அனுமதி

### படையினர் வழங்கினர்

வடமராட்சி கிழக்கு,ஜூன்25

அதி உயர் பாதுகாப்புப் பிரதேசம் என மக்கள் நடமாட்டத்திற்கும், மீளக்குடியமரவும் படையினரால் தடைசெய்யப்பட்டிருந்த நாகர்கோவிலுக்கு நீண்டகாலத்தின் பின்னர் 5 குடியிருப்பாளர்கள் சென்று வீடுகளைப் பார்த்துவர அனுமதிக்கப்பட்டார்கள்.

நாகர்கோவில் பகுதியைச் சேர்ந்த பொது அமைப்புக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து, நீண்டகாலத்திற்குப் பின்னர் இவ்வனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் வீடுகள் சேதமடைந்துள்ளதாக அப்பகுதிக்குச் சென்று திரும்பியோர் தெரிவித்தனர்.

அப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வேறிடங்களில் தங்கியிருப்பவர்கள் இனிவரும் காலங்களில் கட்டம் கட்டமாக நாகர்கோவில் பகுதியில் உள்ள அவர்களது வீடுகளைப் பார்க்க அனுமதிக்கப்படுவார்கள் என்று படையினர் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. (ஒ-182-173)

## ஒளித்து விளையாடியபோது மதில் விழுந்து சிறுவன் பலி!

### ஆதரவற்றோர் இல்லத்தில் சம்பவம்

கொழும்புத்துறை,ஜூன்25

நண்பர்களுடன் 'ஒளித்துப் பிடித்து' விளையாடிய சிறுவன் ஒருவன் மதில் மீது ஏறி மறைந்து கொள்ள முயற்சித்தபோது அந்த மதில் இடிந்து விழுந்ததில் அதற்குள் சிக்கி நசிந்து உயிரிழந்தான்.

இந்தப் பரிதாபச் சம்பவம் நேற்றுக் காலை யாழ்.மணிக்கூண்டுக் கோபுரத்துக்குச் சமீபமாக உள்ள 'ரிம்மர்' மண்டபத்தில் இடம்பெற்றது. இங்கு இயங்கிவரும் புனித பேதுரு ஆதரவற்ற சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் தங்கியிருந்த எஸ்.ரஜீதன் (வயது 14) என்ற சிறுவனே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

அறுபதுக்கும் மேற்பட்ட ஆதரவற்ற சிறுவர் தங்கியுள்ள மேற்படி பராமரிப்பு இல்லத்தில் நேற்றுக் காலை சிறுவர் விளையாடிக்கொண்டிருந்ததாகவும் -

பிரஸ்தாப சிறுவன் மதிலுக்கு மேல் ஏறி மறுபுறம் குதித்து ஒளிந்து கொண்டதாகவும் -

அப்போது மதில் சிறுவன் மீது இடிந்து விழுந்ததாகவும் - கூறப்பட்டது.

இதனையடுத்து சிறுவனைக் காணாது தேடியவர்கள் இடிபாடுகளுக்குள் கிடந்த சிறுவனை மீட்டு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றவேளை சிறுவன் உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்ததாகக் கூறப்பட்டது. (ஒ-ரி)

## கோவிலாகண்டி மாணவர் சிரமம்!

தென்மராட்சி,ஜூன்25

வலிகாமம் பகுதியில் கல்விபயிலும் தென்மராட்சி தெற்குப் பிரதேசமான கோவிலாக்கண்டியைச் சேர்ந்த மாணவர்கள் தினமும் 13 கிலோமீற்றர் தூரத்தை சிரமங்களின் மத்தியில் கடந்து பஸ் ஏற வேண்டியிருப்பதாகக் கூறப்படுகிறது.

தினமும் மாணவர்கள் கோவிலாக்கண்டியிலிருந்து ஆறரைக் கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள நாவற்குழி சந்திக்கு நடந்து வந்து அங்கிருந்து வாகனங்களில் வலிகாமம் பகுதிப் பாடசாலைகளுக்குச் செல்வதாகப் பெற்றோர் தெரிவித்தனர்.



யாழ் நகரில்
அபான்ஸ்
உலகப்புகழ் பெற்ற மின்சார சாதனங்களின் விற்பனையில்
இலங்கையில் முன்னணியில் உள்ள அபான்ஸ் கம்பனியின்
உத்தரவாதம் கொண்ட மின்சார சாதனங்களுக்கு நாடுங்கள்
எமது அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள்.
யாழ்ப்பாண மின்னகம்,
94(6)-ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
Jaffna Electricals
உஷா ஏஜென்சி,
145, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
Usha Agency
LG
Haier
JVC
HOOVER
MITSUBISHI
Electrolux
Frigidaire
Russell Hobbs
Jaipan
morphy richards
AIRMATE
Abans
498, காலி றோட், கொழும்பு-03. தொ.பே: 565265-79.
(சி22683)

# விடுதலைப் புலிகள் வெளியிட்ட தீர்வை தொடர்பான பட்டியல்

**ஏ-9 தரைப்பாதையில் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் ஊடாக எடுத்துச்செல்லப்படும் பொருள்களில் தாம் தீர்வைக்குட்படுத்தும் பொருள்கள், அவற்றுக்கான தீர்வை வீதங்கள் மற்றும் தீர்வை விலக்களிக்கப்படும் பொருள்கள் ஆகிய விவரங்கள் அடங்கிய பட்டியலை தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையினர் நேற்று வெளியிட்டுள்ளனர்.**

**01-06-2002 தொடக்கம் இவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

**விவரப்பட்டியல் வருமாறு:-**

| பொருள் வகை | தீர்வை |
|---|---|
| 01. படகுகள் | 05% |
| 02. மீன்பிடிக் கருவிகள் | |
| 02.01. வெளி இணைப்புப் பொறி | 05% |
| 02.02. மீன்பிடி வலைகள், பிணை, மிதப்பி | 05% |
| 02.03. மீன்பிடிக் கருவிகளும், இரசாயனங்களும் பிறவும் | 10% |
| 03. பண்ணைப் பொருள்கள் | |
| 03.01. வேளாண் உள்ளீடுகள் | 05% |
| 03.02. வேளாண் தொழில்சார் பொறிகள் | 05% |
| 03.03. வேளாண் தொழில்சார் கருவிகள் | 10% |
| 03.04. கோழிப்பண்ணைக் கருவிகள் | 05% |
| 03.05. கோழிக்கூட்டு வலை | 05% |
| 03.06. கால்நடை உணவு - கிலோ ஒன்றுக்கு | 1/- |
| 04. உணவு வகைகள் | |
| 04.01. பால்மா வகை | 05% |
| 04.02. சுவையூட்டப்பட்ட பால் வகை | 10% |
| 04.03. ஊட்டப்பொருள்கள் | 05% |
| 04.04. தேயிலை, கோப்பி | 07% |
| 04.05. சுவையூட்டப்பட்ட தேயிலை, கோப்பி | 10% |
| 04.06. கோதுமை மா | 5% |
| 04.07. கூலம் (தானியம்) பருப்புவகை உட்பட பலசரக்குப் பொருள்கள் | 07% |
| 04.08. தேங்காய்நெய் உட்பட உணவுநெய் வகை | 10% |
| 04.09. பழங்கள் | 10% |
| 04.10. மரக்கறிகள், கிழங்கு | 15% |
| 04.11. பதப்படுத்தப்பட்டு பொதிசெய்யப்பட்ட உணவுவகை | 15% |
| 04.12. மென் பருகை | 15% |
| 04.13. இனிப்புவகை | 15% |
| 04.14. பிஸ்கட் வகைகளும், குளிர்களிக் குழாயும் | 15% |
| 04.15. கோழி இறைச்சியும், இறைச்சிக் கோழியும் | 10% |
| 04.16. கோழி முட்டை - ஒன்றுக்கு | 1/- |
| 04.17. தேங்காய் - ஒன்றுக்கு | 1/- |
| 05. வெதுப்பகப் பொருள்கள் | 10% |
| 06. கொப்பறா | 10% |
| 07. வெற்றிலை | 10% |
| 08. பாக்கு | 10% |
| 09. மதுபானம் | 25% |
| 10. லேகியம் | 25% |
| 11. பீடி, சுருட்டு | 20% |
| 12. வெண்சுருட்டு (சிகரெட்) - ஒன்றிற்கு | /-35 |
| 13. புடைவை வகை | 10% |
| 14. காலணிகள் | 10% |
| 15. மழிகத்திவகை | 10% |
| 16. தூய்மைப்பேண் பொருள் | |
| 16.01. வழலை (Soap) | 08% |
| 16.02. வழலைத் தூள் (Soap powder) | 8% |
| 16.03. சம்புவகைகள் | 10% |
| 16.04. சீயக்காய் | 10% |
| 16.05. பற்பசை | 10% |
| 16.06. பற்றூரிகை | 10% |
| 16.07. நீலம் | 10% |
| 16.08. அழுக்குநீக்கிகளும் கருவிகளும் | 10% |
| 16.09. தொற்றுநீக்கிகளும் பூச்சி கொல்லிகளும் | 07% |
| 16.10. தும்புத்தடி | 10% |
| 16.11. விளக்குமாறு | 10% |
| 16.12. துடைப்பான் | 10% |
| 17. பாய்வகை | 10% |
| 18. வீட்டுப் பயன்பாட்டுப் பொருள்கள் | 20% |
| 19. அழகூட்டும் மெருகூட்டும் பொருள்கள் | 20% |
| 20. விளையாட்டுப் பொருள்களும் கருவிகளும் | 10% |
| 21. அலுமினியப் பொருள்கள் | 20% |
| 22. வெள்ளிப்பொருள்கள் | 20% |
| 23. கல்வனைசு வாளிகள் | 20% |
| 24. சமையல் எரிவாயு (L.P.G) | 12½% |
| 25. அணைகலங்கள் (தளபாடங்கள்) | 20% |
| 26. உணவுத்தாள், சொப்பிங்பை, பொலித்தீன் | 20% |
| 27. பொதிகட்டும் தாள்களும் தாள்பைகளும் | 10% |
| 28. சணல் | 10% |
| 29. சாக்கு, உரப்பை | |
| 29.01. கிலோ 50இற்குட்பட்ட கொள்ளளவுடையவற்றிற்கு | /-50 |
| 29.02. கிலோ 50இற்கு மேற்பட்ட கொள்ளளவுடையவற்றிற்கு | 1/- |
| 30. கயிறு | 10% |
| 31. கூடாரத்துணி | 10% |
| 32. தீப்பெட்டி - ஒன்றுக்கு | /-25 |
| 33. நகைத்தொழிற் கருவிகளும் இரசாயனங்களும் | 15% |
| 34. வெள்ளி அணிகலன்கள் | 15% |
| 35. சீ.ஆர். கொப்பி, புள்காப்தாள் உட்பட எழுதுபொருள்களும் அலுவலகக் கருவிகளும் (மாணவர் பயன்பாட்டுப் பொருள்களுக்கு விலக்களிக்கப்படும்) | 20% |
| 36. நாட்காட்டிகளும் நாட்குறிப்புகளும் | 20% |
| 37. கட்டடப்பொருள்கள் | 15% |
| 38. மை (Paint) வகைகள் | 15% |
| 39. ஒட்டுப்பலகை உட்படப் பலகை வகைகளும் நீப்பை வகைகளும் | 05% |
| 40. மின்னியற் பொருள்கள் | 15% |
| 41. இலத்திரனியற் பொருள்கள் | 15% |
| 42. கதிரொளி மின்னாக்கித் தொகுதி (Solar panel set) (இங்கு தொகுதி எனக் குறிப்பிடப்படுவது, 120 Ahஇற்குக் குறைந்த கொள்ளளவைக் கொண்ட மின்கலம் ஒன்றினையும் அதற்குரிய அமிலத்தினையும் ஐந்திற்கு மேற்படாத DC மின் குமிழ்களையும் உள்ளடக்கியது) | 12½% |
| 43. கதிரொளி மின்சூள் (Solar torch) | 12½% |
| 44. ஈருருளிகள் (Bicycle) | 7½% |
| 45. உந்துருளிகள் | 7½% |
| 46. உழவுச் சிற்றூர்திகள் (Land master) | 7½% |
| 47. இழுபொறிகள் (Tractor) | 7½% |
| 48. ஊர்திகள் | 10% |
| 49. தொழில்சார் பொறிகள் | 10% |
| 50. உதிரிகள் | |
| 50.01 வெளி இணைப்புப் பொறி | 10% |
| 50.02 இழுபொறி உதிரிகள் (tractor) | 10% |
| 50.03 உழவுச் சிற்றூர்தி உதிரிகள் (Land master) | 10% |
| 50.04 ஈருருளி உதிரிகள் | 15% |
| 50.05 உந்துருளி உதிரிகள் | 15% |
| 50.06. ஊர்தி உதிரிகள் | 15% |
| 50.07. பொறி உதிரிகள் | 15% |
| 50.08. சில்லுறை (Tire) காற்றுக்குழாய் (Tube) | 15% |
| 50.09. சல்பூரிக் அமிலம் | 15% |
| 50.10. மின்கலங்கள் | 15% |
| 51. றெக்சீன் | 10% |
| 52. எரிபொருளும் உராய்வுநீக்கியும் | |
| 52.01. உராய்வுநீக்கிகள் - பொறி ஒயில் லீற்றர் ஒன்றிற்கு | 5/- |
| 52.02. உராய்வுநீக்கிகள் - நெய்ப்பசையும் (கிறீஸ்) ஏனையவையும் | 7½/- |
| 52.03. மண்ணெய் - லீற்றர் ஒன்றிற்கு | 5/- |
| 52.04. பெற்றோல் - லீற்றர் ஒன்றிற்கு | 5/- |
| 52.05. டீசல் - லீற்றர் ஒன்றிற்கு | 5/- |
| 53. நிறுத்தல், முகத்தல் அளவைக் கருவிகள் (மின்னியற் கருவிகள் தவிர்ந்தவை) | 10% |
| 54. அலுவலகப் பொறிகள் (மின்னியற் பொறிகள் தவிர்ந்தவை) | 15% |
| 55. மதுபான, குளிர்பான போத்தல் மூடிகள் | 10% |
| 56. வெற்றுக்கலங்கள் | 10% |
| 57. பத்திகள், சாம்பிராணி, தசாங்கம் | 25% |
| 58. மெழுகுதிரி | 25% |
| 59. கற்பூரம் | 25% |
| 60. வெடி | 25% |
| 61. ஏனையவை | 15% |

*மக்கள் பயணத்தின்போது தமது தனிப்பயன்பாட்டுக்கெனக் கொண்டுவரும் பொருள்கள் மீதான தீர்வை விலக்கு.*

01. பயணத்தின்போது குடும்பம் ஒன்றிற்குத் தீர்வை விலக்களிக்கப்படும் பொருள்கள்

- 01.01. ரூபா6,500இற்குக் குறைந்த பெறுமதியுடைய வானொலிப் பெட்டி (Radio) அல்லது ஒலிப்பதிவுப் பெட்டி - 01 தனி
- 01.02. பெற்றோமக்ஸ் - 01 தனி
- 01.03. காற்றுக்கணையா விளக்கு (Hurricane lantern அரிக்கன்லாம்பு) - 01 தனி
- 01.04. ஈருருளி (Bicycle) (பொருத்தப்பட்ட தேவையான இணைப்புகளுடன் ) அல்லது ரூபா 2,000 பெறுமதிக்குட்பட்ட ஈருருளி உதிரிகள் - 01 தனி
- 01.05. மின்சூளுக்கான மின்கலங்கள் - 06 தனி
- 01.06. உடை அழுத்தி (Iron box) - 01 தனி
- 01.07. மண்ணெய் அடுப்பு / 01.08. மின்னடுப்பு / 01.09. எரிவாயு அடுப்பு (Gass Cooker) — என்பவற்றில் ஏதாவது - 01 தனி
- 01.10. புகைப்படக் கருவி (Still Camera) (35,000.00 ரூபா பெறுமதிக்குட்பட்டது) - 01 தனி
- 01.11. நீர் சூடாக்கி (Water Heater) - 01 தனி
- 01.12. கலக்கி (Mixer) - 01 தனி
- 01.13. தேங்காய்நெய் - 05 லீற்றர்
- 01.14. மண்ணெய் - 05 லீற்றர்

02. சிறிலங்காவிலிருந்து இடமாற்றம் பெற்றுவரும் அரச திணைக்கள, அரசசார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் தாம் பயன்படுத்திய பொருள்களைக் கொண்டுவரும்போது அவற்றிற்குத் தீர்வை விலக்களிக்கப்படும்.

03. தமிழீழத்தில் நிலையாக வதியும் நோக்குடன் சிறிலங்காவில் இருந்தோ வேறு நாடுகளிலிருந்தோ வருவோர் தாம்பயன்படுத்திய பொருள்களைக் கொண்டுவரும்போது அப்பொருள்களிற்குத் தீர்வை விலக்களிக்கப்படும்.

04. மக்கள் பயணத்தின்போது தமது பயன்பாட்டிற்கெனக் கொண்டு வரும் உணவுப்பொருள்கள், உடை போன்றவற்றிற்குத் தீர்வை விலக்களிக்கப்படும்.

***குறிப்பு:***

01. தீர்வை விலக்குப் பெறுவதற்குரிய பொருள்களைக் கொண்டு வரும்போது பொருள்களைக் கொண்டுவருபவரின் பெயர், அடையாள அட்டை எண் என்பன குறிப்பிடப்பட்டுள்ள முறையான சிட்டைக்களைக் (கடையின் பெயர், சிட்டைத் தொடர் எண் என்பன தெளிவாக இருத்தல் வேண்டும்) கொண்டு வருதல் வேண்டும்.

02. பயணிகளுக்கு வழங்கப்படும் தீர்வைச் சலுகைகளை வாணிப நோக்கத்திற்காகப் பயன்படுத்துதல் கூடாது.

*தீர்வை விலக்களிக்கப்படும் பொருள்கள்*

01. மாணவர் பயன்பாட்டுப் பொருள்கள்
   - 01.1. எழுதுகோல் (பேனா, பென்சில்), சோக், சீவிலிக்கூடு, அழிறப்பர், அடிமட்டம், கருவிப்பெட்டி, சித்திரக்கலர், தூரிகை, கிளே போன்றவை
   - 01.2. பாடப்புத்தகங்கள்
   - 01.3. பயிற்சிப் புத்தகங்கள்
   - 01.4. பயிற்சிக் கொப்பிகள் (சீ.ஆர். கொப்பிகள் தவிர்ந்தவை)
   - 01.5. சித்திரக் கொப்பிகள்
   - 01.6. படங்களும் ஏனையவையும்
02. செய்தித்தாள்கள், மாத இதழ்கள்
03. கல்வி நோக்கத்திற்காகக் கொண்டுவரப்படும் கணினிகளும் துணைப்பொருள்களும்
04. விதைகள்
05. குழந்தை உணவு
   - 05.1. லக்ரோஜன் - தரம் 01
   - 05.2. லக்ரோஜன் - தரம் 02
   - 05.3. எஸ்.எம்.ஏ.
   - 05.4. செரிலாக்
   - 05.5. நெஸ்ரம்
   - 05.6. குழந்தைகளுக்கான பிஸ்கற்
06. குழந்தைகளுக்கான ஓடிக்கொலோன் (Audicologne)
07. மருந்துவகை
08. குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருள்கள் விளையாட்டு ஊர்திகள், மிருகங்கள், ஊர்வன, பறப்பன விளையாட்டுத் துப்பாக்கிகள், வெடிமருந்துகள், பொம்மைகள் விளையாட்டுத் தொலைக்காட்சி, தொலைநோக்கி, புகைப்படக் கருவி, தொலைபேசி, சிறுவர் மனவளர்ச்சி மற்றும் பொழுது போக்குப் பொருள்கள், சிறுவர் இசைக்கருவிகள்.
09. கனியுப்புக் கலந்த நீர் (Mineral Water)
10. பனிக்கட்டி (ஐஸ்)
11. L.P.G சிலிண்டர்
12. லீக்ஸ்
13. கரட்
14. போஞ்சி
15. அயடின் கலக்கப்பட்ட உப்பு
16. மாட்டுவண்டில், குதிரைவண்டில்
17. வளர்ப்பிற்காகக் கொண்டுவரப்படும் கால்நடைகள்
18. கால்நடை மருந்துவகைகள்
19. அரச திணைக்களங்கள், திணைக்களப் பயன்பாட்டிற்கெனக் கொண்டுவரும் பொருள்கள்
20. அரச சார்ப்பற்ற நிறுவனங்கள் (N.G.O) முன் ஒப்புதலுடன் மக்கள் நலப் பயன்பாட்டிற்கும் நிறுவனப்பயன்பாட்டிற்கும் கொண்டுவரும் பொருள்கள்.
21. தூய்மைத் துணி (Sanitary Towel)

## முக்கிய கலந்துரையாடல்

வடமாகாண தெ.ப.பொ.கூ.ச.சமாசம்

காலம்:- நாளை (26.06.2002)
முற்பகல் 11.00மணி

இடம்:- யாழ்.ப.நோ.கூ.சங்க கேட்போர்கூடம்

பனை அழிப்புக்கு எதிரான கூட்டுப்பேரணி பற்றிய முக்கிய மானதும் இறுதியுமானதுமான இந்தக் கலந்துரையாடலில் பனை தெ.வ.கூ.சங்கங்களின் தலைவர்களையும் பொது முகாமையாளர்களையும் எம்மால் அழைக்கப்பட்ட மற்றும் இவ் வளத்தில் அக்கறையுள்ள அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

இல.52,சோமசுந்தரம் அவெனியு, - தலைவர்.
சுண்டுக்குளி. (C/22680)





# க்ராக் க்ரீம்

**அனைத்து க்ராக் க்ரீமுடன், போரோசொப்ட் 5கிராம் பக்கெட் இலவசம்**

'க்ராக் க்ரீம்' வலி, எரிச்சல் இரத்தக்கசிவு, வீக்கம் என்பவற்றிலிருந்து பாதுகாத்து இழந்த ஈரத்தை மீட்டு வெடிப்புக்களை நிரப்புகிறது. இதன் சிறப்பு ஆயுர்வேத பார்முலா எவ்வித பக்க விளைவையும் ஏற்படுத்தாமல் 14கே நாட்களில் வெடிப்புக்களை நிரப்பி பாதங்களை அழகுபடுத்துகிறது. தொடர்ந்து பாவிப்பதன் மூலம் திரும்பத் திரும்ப வருவதை தடுக்கலாம்.

A PARAS PRODUCTS

விநியோகிப்போர் பார்ம்கோ மார்க்கடிங் சர்விசஸ் (பி) லிமிடெட் 074-814559



# க்லோகாட் கோச்சியில் சென்றால் பரிசு

குடும்பமாக பரிசுகளை வெல்லுங்கள்
க்லோகாட் ரயிலுடன் இன்றே இணையுங்கள்



க்லோகாட் மூலம் உங்கள் குடும்பத்தின் அனைவரும் பரிசுகளை வெல்ல இதோ ஓர் நல்ல சந்தர்ப்பம்

நீங்கள் செய்ய வேண்டியது உங்கள் பெயர், முகவரி என்பவற்றுடன் ஏதாவதொரு க்லோகாட் பெட்டி ஒன்றையும் இணைத்து அனுப்ப வேண்டியது மட்டும்தான். அத்தோடு உங்கள் விற்பனையாளரின் பெயர், முகவரி என்பவற்றையும் எழுதி அனுப்ப மறக்க வேண்டாம். நீங்கள் பரிசு வெல்லும் அதே வேளையில் உங்கள் விற்பனையாளரும் பரிசு வெல்வார்.

**முதலாவது அதிர்ஷ்டமடையும் குடும்பத்திற்கு**
21" கலர் தொலைக்காட்சி, கஸட் பிளேயர், சலவை இயந்திரம், குளிர்சாதனப்பெட்டி என்பன பரிசுகளாகக் கிடைக்கும்

**இரண்டாவதாக அதிர்ஷ்டமடையும் மூன்று குடும்பங்களுக்கு மூன்று பரிசுகள்**
21" கலர் தொலைக்காட்சி, காஸ்குக்கர், பிளெண்டர், VCD பிளேயர் ஒன்று

**விற்பனையாளர்களுக்கும் பரிசு**
அதிர்ஷ்டமடைந்த நான்கு குடும்பங்களின் விற்பனையாளர்களுக்கும் நான்கு கிஃப்ட் பரிசுகள்

**ஆறுதல் பரிசுகள்**
100 ஆறுதல் பரிசுகளாக ஹேமாஸ் சந்தைப்படுத்தல் வழங்கும் 100 பரிசுப் பொதிகள்

**முதலாவதாக அனுப்பியோருக்கு**
முதலாவதாக விண்ணப்பப்படிவங்களை அனுப்பியோரில், 650 பெயர்களுக்கும் அவர்கள் விற்பனையாளர்களுக்கும் அழகிய டிஷேட் ஒன்று

உங்கள் விண்ணப்பப்படிவங்களை ஜூலை 19ம் திகதி 2002 இக்கு முன் அனுப்பிவையுங்கள்

க்லோகாட் கோச்சியில் சென்றால் பரிசு - த. பெ. இல. 911 கொழும்பு

க்லோகாட்

Masters DDB LN: C/38/2002



# தரம் குறைந்த இரும்பினை வாங்கினால் வாழ்நாள் முழுதும் வருந்த நேரிடும்

நீளம் குறைந்த, பாரம் குறைந்த, சக்தியற்ற, சுற்றுவட்டம் குறைந்த, உத்தரவாதமற்ற, தரம் குறைந்த, இரும்பை வாங்கி உபயோகிககாதீர்கள்

அசல் "ஹயட் ஸ்டீல்" இரும்புக் கம்பிகளில் HS முத்திரை இடப்பட்டிருக்கும். "ஹயட் ஸ்டீல்" இரும்பு வடக்கிலும் கிழக்கிலும் கட்டிடம் கட்டுவதற்கும் இன்னும் பல வேலைகளுக்கும் மிகவும் உகந்ததென கட்டிடத் திணைக்களத்தினால் அத்தாட்சிப் படுத்தப்பட்டிருக்கிறது




இலங்கையில் உருக்கின் தரத்தை மேம்படுத்துகிறது

## ஹயட் ஸ்டீல்ஸ் (பிரை) லிமிட்டட்

762, மருதானை வீதி, கொழும்பு 10.
தொலைபேசி: 696644, 075-367396, 075-338956-7 ஃபெக்ஸ்: 696633 ஈமெயில்: tho@eureke.hialk
தொழிற்சாலை: பெலஹெல, தெகட்டன. தொலைபேசி: 571594, 571890 பெக்ஸ்: 571890
விற்பனையாளர்களுக்கும் தயாரிப்பு விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்: 071-729708

"ஹயட் ஸ்டீல்" இரும்பு
யாழ்ப்பாணத்தில்ஏக விநியோகத்தர் மற்றும் முகவர்

**ஜெசிபா ஏஜன்ஸ்**
132, ஸ்ரென்லி வீதி, யாழ்ப்பாணம்.

(C/22361)

# தமிழருக்கும் சமஉரிமை கிட்டும் சமாதானத் தீர்வே அவசிய தேவை

## யூ.பி.விஜயகோன் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூன்25

இலங்கையில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் உட்பட மக்கள் அனைவரும் சமஉரிமைகளுடன் வாழக்கூடிய சமாதானத் தீர்வே அவசியமான தேவையாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் அமைச்சரும் கோட்டை ஸ்ரீ ஜெய வர்த்தனபுர லயன்ஸ் கழகத் தலைவருமான யூ.பி.விஜயகோன்.

நேற்றுமுன்தினம் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் கோட்டை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர லயன்ஸ் கழகத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற 'சமாதானக் குடைகள்' வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே யூ.பி.விஜயகோன் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தனது சிறப்புரையை தமிழிலேயே நிகழ்த்தினார். அந்த உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் .இங்கு இருபது ஆண்டுகளுக்கு முன்னர் கடமையாற்றினேன். உங்களது முகங்கள் எனக்கு அன்னியமானவை அல்ல. என்னுடன் கடமையாற்றியவர்கள் இங்கு இருக்கிறார்கள். பலர் வெளிநாடுகளிலும் இருப்பார்கள்.

சமாதானம் வட இலங்கைக்கு மட்டுமல்ல தென்னிலங்கைக்கும் அவசியமானதாகும். இன்றைய நிலையில் எம் எல்லோரதும் அபிலாசை நிரந்தர சமாதானமேயாகும்.

சமாதானத்தை முன்னெடுக்க வேண்டிய கடமை மாணவர்களது கைகளிலேயே உள்ளது. வடபகுதி மாணவர்கள், தென்னிலங்கை மாணவர்களுக்கு மட்டுமன்றி உலக மாணவர்கள் அனைவருக்கும் இன்று சமாதானமே தேவையான ஒன்றாக இருக்கிறது.

இலங்கையில் சிங்களவர்கள், தமிழர்கள், சோனகர்கள், பறங்கியர்கள் சமமாக வாழக்கூடிய சமாதானமே எமக்குத் தேவை.

யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டமை ஒரு துன்பியல் சம்பவமாகும். அந்தச் செயல் கேட்டு நான் உடனடியாகப் புறப்பட்டுவந்தேன். ஆனால், அந்த இடத்தை என்னால் அடைய முடியவில்லை.

- என்று அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு பொதுமக்கள் சார்பில் உரையாற்றிய யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கூறியதாவது:-

'தமிழ்மக்கள் 'அனைவரும் சமாதானத்தையே விரும்புகின்றனர் என்பதை தென்னிலங்கை மக்களுக்கு கோட்டை லயன்ஸ் கழகத்தினராகிய நீங்கள் எடுத்துச் சொல்லவேண்டும். உங்களின் சகோதரக் கழகங்களின் மூலம் இந்தச் செய்தியைத் தென்பகுதி முழுவதும் தெரிவிக்கவேண்டும். நாங்கள் விரும்புவது "கௌரவமான சமாதானம்" என்பதைத் தெளிவுபடுத்தவேண்டும். சமவுரிமைகள் நிறைந்த சமாதான சகவாழ்வே எமது அபிலாசை என்பதை தமிழ் மக்கள் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்' - என்றார் அவர்.

இலங்கை வங்கி, கூட்டுறவுத் திணைக்களம் என்பவற்றின் அனுசரணை(Sponcer) உடன் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில், தென்பகுதியைச் சேர்ந்த அரிமாக் கழகங்களைச் சேர்ந்த சீமான்கள், சீமாட்டிகளுடன் யாழ்.மாவட்ட அரிமாக் கழகத்தினரும், இலங்கை வங்கியைச் சேர்ந்த முகாமையாளர்கள், காப்புறுதிக் கூட்டுத்தாபன நிர்வாகத்தைச் சேர்ந்த உயர்நிலை அதிகாரிகளுடன் யாழ்.மாவட்ட 'லயன்ஸ்' ஆணையாளர் கலாநிதி க.குணராசாவும் கலந்துகொண்டார். சமாதானத்தை வலியுறுத்தும் வாசகங்கள், மும்மொழிகளிலும் அச்சிடப்பட்ட குடைகள் இந்நிகழ்வில் யாழ்மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட சுமார் 2 ஆயிரம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

எதிர்வரும் இருபத்தாறாம் திகதி ஐ.நாவினால் "போதைப்பொருள் ஒழிப்பு தின"மாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இன்று திங்கள் தொடக்கம் எதிர்வரும் முப்பதாம் திகதிவரை மாணவர்கள் பாடசாலைகளிலும் மற்றவர்கள் பொதுஇடங்களிலும் இதனை அனுஷ்டிக்க வேண்டும் என இந்த நிகழ்வில் அறிவிக்கப்பட்டது.

'டெங்கு' ஒழிப்புத் திட்டம் தொடர்பான சுவரொட்டிகள், கையேடுகள் பாடசாலைகளுக்கு வழங்கப்படும் எனத் தெரிவித்ததுடன், மாதிரி கையேடுகளும் வழங்கப்பட்டன.

கோட்டை ஜயவர்த்தனபுர 'லயன்ஸ்' கழகத்தினர் ஒருதொகுதி நூல்களை யாழ்.பொதுநூலகத்திற்கு வழங்கத் தம்முடன் எடுத்து வந்திருந்தனர். இதனால் யாழ்.பொதுநூலக நூலகர் திரு.தனபாலசிங்கத்திடம் அடையாள புத்தக அன்பளிப்பு வைபவரீதியாக வழங்கப்பெற்றது.

(ஒ-ரி)





வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஐந்தாவது ஆண்டு விழாவில் முல்லைமணி வே.சுப்பிர மணியத்துக்கு, 'இலக்கியச் செல்வர்' விருது வழங்கப்படுவதை முதல் படத்திலும், எஸ்.ரி.அரசுவுக்கு 'நாடகச் செல்வர்' விருது வழங்கப்படுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

பேராசிரியர் அ.மோகனதாஸ் முன்னிலையில் வவுனியா பிரதேச செயலர் திருமதி எமல்டா சுகுமார் விருதுகளை வழங்கினார்.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் கலை இலக்கிய சஞ்சிகையான 'மாருதம்' சஞ்சிகை இதழ் - 1 வெளியிடப்பட்டது. இச்சஞ்சிகை ஆறுமாதங்களுக்கு ஒரு தடவை வெளிவரும். (ஐ)

# பனை வளம் பெருக்கி மகிழ்வுடன் வாழ்வோம்

**சி.சிவநேசன்**
பொதுமுகாமையாளர்,
ப.தெ.வ.அ.கூ.நிறுவன பேரிணையம்,
கிளிநொச்சி.

பூலோகத்தில் கற்பகதருவான பனைமரம் அடிவேரில் இருந்து உச்சி வரை ஒவ்வோர் வளர்ச்சிப் பருவத்திலும் பயன்தரக்கூடியது. ஆதி காலத்தில் இருந்தே பனை வளம் தமிழ் பேசும் மக்கள் வாழ்வோடு பின்னிப்பிணைந்து தமிழரின் குறியீடாக அமைந்துவந்துள்ளமையை வரலாறுகளில் இருந்தும் இலக்கிய ஆதாரங்களில் இருந்தும் அறிய முடிகிறது. "பனை உள்ள நாட்டில் பஞ்சமில்லை", "பனை இன்றி வாழ்வில்லை" எனும் முதுமொழிகள் இதை விழித்து நிற்கின்றன.

பூமத்தியரேகைக்கு அண்மையில மேற்கு ஆபிரிக்கா, தெற்காசியா, தென்கிழக்காசியா போன்ற நாடுகளில் சுமார் 14 கோடி பனை மரங்கள் வியாபித்திருக்கின்றன.

| நாடுகள் | பனைகளின் எண்ணிக்கை (லட்சத்தில்) |
|---|---|
| மேற்காபிரிக்கா | 500 |
| மதநாகர் | 10 |
| இந்தியா | 600 |
| இலங்கை | 110 |
| பர்மா | 28 |
| தாய்லாந்து | 20 |
| இந்தோனேசியா | 100 |
| கம்பூச்சியா | 20 |

உலகில் பனை வளம்

### ஈழப் பனைகள்

இலங்கையில் உள்ள பனை மரங்களில் 99% வடக்குக் கிழக்கிலும் மீதி 1%ம் புத்தளம், அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளிலும் காணப்படுகின்றன. அதிலும் வடமாகாணத்திலேயே அதிகமாக பனை வளம் காணப்படுகிறது.

இலங்கையில் காணப்படுகின்ற பனை வளம் முழுமையாக பயன்படுததப்படாமையை அறியமுடிகிறது. பனையில் இருந்து பல பொருள்களை உற்பத்தி செய்யலாம். திருக்குடத்தை அருணாசலம் புலவர் இயற்றிய "தலாவிலாசம்" என்ற பனையைப் பற்றிய நூலில் 801 விதங்களில் பனை மரம் பயன்படுத்தப்பட்டதாகக் கூறுகிறார்.

உடப்புசல்லாவையில் 1843 - 1847 வரை கடமையாற்றிய அலெக்சாந்தா என்ற தோட்டத்துரை எடின் பேர்க் என்ற நகரில் நடைபெற்ற காட்டுப் பொருள்கள் சம்பந்தமான கண்காட்சி ஒன்றுக்காக யாழ்ப்பாணத்தில் இருந்து பனையினால் செய்யப்பட்ட நூறு பொருள்களை எடுத்துச் சென்றதாக அறிய முடிகிறது. ஆனால் இன்றைய வளர்ச்சிப் போக்கில் அந்த நூறு பொருள்களை ஆகுதல் செய்து எமது வாழ்க்கைக்கு பயன்படுத்துவதற்கு நாம் தவறியிருக்கின்றோம்.

எனவே இயற்கைத் தாவரமாகக் காணப்படுகின்ற பனைமரத்தை நாம் திட்டமிட்டு வளர்த்து எதிர்கால சந்ததியினுடைய வாழ்வுக்குவளம் சேர்க்க வேண்டியவர்களாக எம்மை ஆக்கிக்கொள்ளவேண்டும்.

### வகைகளஏ

பனை " பொராஸ்செல் பிலபெல்லியா" எனும் தாவரவியல் பெயரைக் கொண்டுள்ளது. சிங்கள மக்கள் இதனை "தல்" என்று அழைப்பர். இன்றைய தாவரவியல் பாகுபாட்டாளர்கள் நான்கு வகையான பனை சார்ந்த இனங்களை குறிப்படுவர் அவையாவன பனை, தென்னை, ஈந்து, உதிலி என்பனவாகும். இந்த நான்கு இனத்திலும் பனை, தென்னை ஆகியன எமது வடமாகாணப்பிரதேசத்தில் பரந்து காணப்படுவது ஒரு சிறப்பம்சமாகும்.

பயன்படுத்த முடியாது காணப்படுகின்ற எந்த மண் வளத்திலும் பனை தன்னை வளர்த்துக் கொள்ளும் ஆற்றலைக்கொண்டது. இம் மரத்தின் சிறப்பான இயல்பு கடும் வரட்சிக்கு தாக்குப் பிடிக்கக் கூடியதாகும். மேலும் 100 வருடங்களுக்கு மேல் வாழக்கூடியதும் பனையில் இருந்து வெட்டியெடுக்கப்பட்ட மரம் 200 வருடங்களுக்கு மேல் பழுதடையாமல் பயன்தரக்கூடியதுமாகும்.

பனை மரம் சராசரியாக 12 முதல் 15 மீற்றர் உயரத்திற்கு வளர்கின்றது. இத்தாவரம் 100 முதல் 150 வருடம் வாழ்க்கைக் காலத்தை உள்ளடக்கியதாக இருந்தபோதும், 12முதல் 15வருடங்களில் பயன்தரக் கூடியதாகும். பனையின் பயனை நான்கு வகையில் நாம் பெற்றுக் கொள்ளலாம். அவையாவன: சுரப்பு உற்பத்திகள், பழ உற்பத்திகள், ஓலை, தும்பு(நார்) உற்பத்திகள், மர உற்பத்திகள்.

### உற்பத்திகள்

☆ சுரப்பு உற்பத்தியில் இருந்து பதனீர், பாணி, சல்லாக்காரம், பனை வெல்லம், பனம்சீனி எனும் உணவுப் பண்டங்களும்கள், சாராயம் போனற மது உற்பத்திகளையும் பெறலாம்.

☆ பழ உற்பத்திகளில் பனாட்டு, பனங்களி சேர்ந்த பனம் பண்டங்கள், ஒடியல், புழுக்கொடியல், பூரான், பற்பசை, நோய் எதிர்ப்புத் தடை பொருள்கள் ஆகியன பெறலாம்.

☆ ஓலை, தும்பு உற்பத்தியில் பாய், கடகம், கூடை, துடைப்பங்கள், விசிறி, சுவர்மாட்டி, அலங்காரப் பூக்கள் என்பனவும் எரிபொருளாகவும் பயன்படுகிறது.

☆ மர உற்பத்தியில் வீட்டு நிர்மாணப் பொருள்களையும் அலங்காரப் பொருள்களையும் உற்பத்தி செய்ய முடிகிறது.

மேற்குறித்த உற்பத்திகளில் உணவுப் பண்டங்கள் அனைத்தும் மிகுந்த ஊட்டச்சத்தும் நோய் எதிர்பு சக்தியும் கொண்டனவாகும். இவ்வாறான பனையை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் பனம் பண்டங்களை உணவாகக் கொள்ளுகின்ற ஒரு சமூக அமைப்பைத் தோற்றுவிக்க வழி செய்வோமாயின் உறுதி மிக்கதும், நோய் எதிர்ப்புச் சக்தி கொணடதும் நீண்ட ஆயுள் கொண்டதுமான ஒரு சமூக அமைப்பை உருவாக்க முடியும். எனவே அதன் முதற கட்டமாக இருக்கின்ற ளைத்தை பயன் படுத்துவதோடு புதிய பனை வள அபிவிருத்தியை அதிகரிக்கச் செய்ய வேண்டிய பொறுப்பும் இப்போது வடமாகாணத்தில் வாழுகின்ற அனைவரதும் கடமைகளில் ஒன்றாகின்றது.

### அழிப்பு

அண்மைக்காலத்தில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நடைபெற்று வரும இராணுவ நடவடிக்கையினால் 25 லட்சம் பயன்தரு பனை மரங்கள் காப்பரண் தேவைக்கும் எறிகணைகள், வான் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டும் அழிக்கப்பட்டு உள்ளன. இவற்றில் 19 லட்சம் வடமாகாணத்திலும் 6 லட்சம் கிழக்கு மாகாணத்திலும் அழிந்ததாக அறிய முடிகிறது. குறிப்பாக வடபகுதி அழிவுகளில் இராணுவ நடவடிக்கை அதிகமாக நடந்துள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு, நெடுங்கேணி, புளியங்குளம் ஆகிய பிரதேசங்களில் கிட்டத்தட்ட 12 லட்சம் பனை மரங்கள் அழிக்கப்பட்டிருப்பதை அறிய முடிகிறது. இநத 12 லட்சம் பனைமரங்களையும் மீள் நடுகைக்கு உட்படுத்துவதற்கு தமிழ் பேசும் மக்களாகிய நாம் செயற்படவேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது.

ஒரு ஏக்கரில் 10 அடிக்கு ஒன்றாக 500 பனைகள் நாட்டி வளர்க்கலாம். பனை விதை நடுகையானது கடந்த காலங்களில் புரட்டாதி மாதத்தில் நவராத்திரி விரதம் அனுட்டிக்கப்படும் காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வந்திருப்பினும் தற்போது இக்காலத்திற்கு முதலே பனம்பழம் பெறக்கூடியதாக உள்ளதால் ஜூலை மாதம் 5ஆம் திகதியளவில் இருந்தே தொடர்ச்சியாக பனம் விதை நடுகையை மேற்கொள்ளக்கூடியதாக இவ்வருடம் திட்டமிடப்பட்டுள்ளது.

பனை மரம் பூக்கும்வரை - பாளை வெளிவரும்வரை - அதை ஆண், பெண் பனையென பிரித்தறிய முடியாது. எனினும் ஒற்றைவிதையைக் கொண்ட பழம் ஆண் பனையாக அமையும். இரு விதைகளைக் கொண்ட பழம் ஓர் ஆண் பனையையும் ஒரு பெண பனையையும் உருவாக்கும் எனவும் மூன்று விதைகளைக் கொண்ட பழம் ஒரு பெண் [illegible] இரு ஆண பனையையும் [illegible] எனவும் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். எனவே இரு விதை கொண்ட பழங்கள் தேர்வு செய்தல் நடுகைக்கு சிறப்பாகும்.

பனம் விதையின் விதைப் பருவம் விதையில் இருந்து 22 நாள்கள் வரை எனக் கூறுவர். எனவே குறிதத அந்த நாள்களுக்குள் நடுகை மேற்கொள்ளுதல் அவசியம் ஆகும். இவ் விதைகளின் முளை திறன் 35 முதல் 50 வீதம் வரையாகும். எனவே யாழப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் அழிந்த 12 லட்சம் பனை மரங்களுக்கு ஈடாக பனம் விதை நடுகை மேற்கொள்ள வேண்டியிருப்பின் 30 லட்சம் பனம் விதைகள் நடுகைக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும். அவ்வளவு தொகையான பனம் விதையை இவ்வருடம் நடுகை செய்வதற்கு பெறமுடியாது விடினும் குறித்த 12 லட்சம் பனம் விதைகளையாகுதல் நாம் நடுகை செய்வது அவசியமாகும். அதற்காக வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பனை துறைசார் நிறுவனங்கள் அனைத்தும் காலத்தின் தேவையறிந்து திட்டமிட்டு செயற்படுவதுடன் இங்கு வாழுகின்ற அனைத்து மக்களும் பனம் விதை நடுகைக்கு தங்களால் ஆகக் கூடிய ஒத்துழைப்பினை வழங்கி பனம் விதையை நாட்டி எதிர்கால சநததிக்கு மாசற்ற சூழலையும் சிறநத மழை வீழ்ச்சியையும் ஏற்படுத்துவதுடன் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கிராமிய பொருளாதார மேம்பாட்டிற்கு வழி செய்வதுடன் எதிர்கால சந்ததிக்கான ஊட்டச்சத்து மிக்க உணவுப் பொருள்களையும் உறைவிடப்பயன்பாட்டு பொருளகளையும் பெற்று தன்னிறைவு அடைந்து எமது தாயகத்திலிருந்து பனவள உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணிகளை மீதப்படுத்தக்கூடிய தேசிய மூலவளமான பனைவளத்தை முறையாக வளர்த்தெடுப்பதற்கு அனைவரும் உறுதியுடன் இவ்வருடம் செயற்படுவோம்.

*"பனைவளம் பெருக்கி பயன்பல - பெற்று*
*மனைவளம் சிறக்க மகிழ்வுடன் - வாழ்வோம்"* ☆

# சின்னஞ்சிறு விளம்பரம்

### இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சிக்கோழி 1/4 கிலோவில் இருந்து வேண்டிய நிறைகளில் எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 61, சேர் பொன். இராமநாதன் வீதி, நாச்சிமார் கோயில வீதி முன்பாக. (5174)

### விற்பனைக்கு

**Gold Fish** மீன்கள் பெரியது **Red Cap** சுபாங்கி **Blue, Red** ஏஞ்சல் மீன்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.35/1, யாழ். இந்துக் கல்லூரி அருகில் உள்ள ஒழுங்கை, யாழ்ப்பாணம். (5093)

### தவறிவிட்டது

அன்னுங்கை, கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த நாகலிங்கம் சுந்தரலிங்கம் என்பவருடைய தே.அ.அ. (இல. 551911756V), வி.அ.அ. என்பன யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைக்கவும். (5179)

திருகோணமலையைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை கிரிலயன் என்பவருடைய தே.அ.அ. (இல.812033425V) அளவெட்டிக்கும் சுன்னாகத்திற்கும் இடையில் 21-06-2002 வெள்ளிக்கிழமை அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கஜமுகன் ஸ்ரோர்ஸ், அளவெட்டி (அருணோதயாக் கல்லூரி முன்பாக) என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (5177)

### காணவில்லை

எம்மால் அன்புடன் வளர்க்கப்பட்ட வெள்ளை நிறமும் மண் நிறமும் கலந்த பொமனேரியன் நாய்க்குட்டியை 18.06.2002 முதல் காணவில்லை. அத்தியடி, நாவலர் வீதி, வைமன் வீதி, ஸ்ரான்லி வீதி ஆகிய இடங்களில் கண்டவர்கள் ந.தேவா, 30/13, அத்தியடி குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் எனும முகவரியில் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (5178)

### TWO LANDS FOR SALE

**3 1/2 Lachcham with well and four sides wall, 3 Lachcham with two sides wall, both at temple Road, Nallur North, Nallur. No brokers. Contact: Rasa Vamadevan 180, Point Pedro Road, Jaffna. T.P.: 3239** (5071)

### தேவை

சமையல் செய்து வீட்டைப் பராமரிப்பதற்கு ஓர் ஆள் தேவை. நல்ல சம்பளம் தரப்படும். உடன் நேரில் வரவும். தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (5153)


**O/Lஇல் வர்த்தகம்**
**கற்காத மாணவர்களுக்கு!**
**A/L 2004**
**கணக்கீடு**
**D.SAM**
ஆரம்பம்: 29.06.2002
சனி மதியம் 12 மணி
(C/22663)


# பட்டப் பகலில் வீட்டை உடைத்து 25,000 ரூபா பொருள்கள் திருட்டு!

## கல்வியங்காட்டில் சம்பவம்

கல்வியங்காட்டுப் பகுதியில் பட்டப் பகலில் வீடு உடைத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவ நேரம் வீட்டிலிருந்தவர்கள் கோவிலுக்குச் சென்றதைப் பயன்படுத்தி திருடர்கள் வீட்டின் யன்னலை உடைத்து உட்புகுந்து அங்கிருந்த 15 ஆயிரம் ரூபா பணத்தையும், இரு புதிய கைக்கடிகாரங்களையும், உடைகள், இரு வானொலிப் பெட்டிகள் என்பவற்றையும் திருடிச் சென்றுள்ளனர்.

வீட்டினுள் திருடர்கள் இருந்த சமயம் சம்பந்தப்பட்ட வீட்டார் திரும்பி வந்துவிட்டதாகவும், ஆயினும், திருடர்கள் அபகரித்த பொருளகளுடன் தப்பியோடி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-180)

# துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் பிரதி அதிபர்
**லெப்ரினன்ட் T.நாகரத்தினம**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி செல்லம்மா தாமோதரம்பிள்ளை**
அவர்கள் காலமானதையிட்டு துயருறுவதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய வட்டம்,
யாழ்.மத்திய கல்லூரி.
(5188)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

வேலணை ப.தெ.வ.அ.கூ.சங்க ஊழியர் நலன்புரிச் சங்கத்தினரால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 22.06.2002 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டது.

பரிசுக்குரிய இலக்கங்கள் வருமாறு:

| | |
|---|---|
| முதலாம் பரிசு | 0639 |
| இரண்டாம் பரிசு | 1542 |
| மூன்றாம் பரிசு | 1978 |

ஆறுதல் பரிசில்கள்
**0962, 0728, 0162, 0385, 4690**

மேற்படி பரிசுக்குரியவர்கள் அலுவலகத்தில் தொடர்புகொள்ளவும்.

*வேலணை கிழக்கு,*
*வேலணை - 04.*
(5165)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
23 - 04 - 1923



உதிர்வு
26 - 05 - 2002

## அமரர் சேதுபதிப்பிள்ளை இராசலிங்கம்

நெல்லண்டை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வியாபாரி மூலையை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற இராசலிங்க உபாத்தியாயரின் மனைவியுமாகிய எமது குடும்பத் தலைவி திருமதி சேதுபதிப்பிள்ளை இராசலிங்கம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் பல வழிகளில் எமக்கு உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் இன்று (25-06-2002) செவ்வாய்க்கிழமை வீட்டில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*வியாபாரி மூலை,*
*பருத்தித்துறை.*
(5187)
குடும்பத்தினர்



H A P P Y B I R T H D A Y

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

## செல்வன் மகேந்திரன் மகிழ்ராஜ்

ஏழாலை வடக்கைச் சேர்ந்த
**மகேந்திரன் (செல்வம்) - கண்ணகி**
தம்பதிகளின்
## செல்வப் புதல்வன் மகிழ்ராஜ்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (25.06.2002) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

அவரை அன்பு அப்பா, அம்மா மற்றும் அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார், அக்காமார், அண்ணாமார், தம்பி யாவரும் அவரை எல்லாம் வல்ல ஏழாலை ஆலங்காட்டுப் பிள்ளையார், சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் அருள்பெற்றுப் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

*ஏழாலை வடக்கு,*
*ஏழாலை.*
(5180)
இ.மகேந்திரன்.

H A P P Y B I R T H D A Y

ஓம் சக்தி

# தொடர்பு கொள்க!

மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி அன்னையின் படங்கள், மந்திரநூல் முதலியன பெற்றுக்கொள்ளவும், புதிய மன்றங்கள் அமைத்து அன்னையின அருளுக்குப் பாத்திரமாகவும் தொடர்புகொள்ளவும்.

**ஆதிபராசக்தி ஆலயம் / மன்றம்**
*கிளானை, அல்வாய்.*
(5157)

# உடன் தேவை

**பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு யாழ்.மாநகர சபை எல்லைக்குள் ஒருபரப்புக்கு மேற்பட்ட வெற்றுக் காணி அறுதியாகவோ அல்லது குத்தகைக்கோ உடன் தேவை. உறுதியின் பிரதியுடன் தொடர்புகொள்ளவும்.**

**ஸ்ரீ முருகன்**
303, K.K.S.**வீதி, யாழ்ப்பாணம்.**
**T.P. 021-2670, 3588**

சமாதானத்தின் தேவன்
இயேசு வாழ்வு தருகிறார்!

## தெய்வீக சுகமளிக்கும் நற்செய்திக் கூட்டங்கள்

**கடந்த 21ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம் துரையப்பா ஸ்ரேடியத்தில் கூட்டங்கள் தினமும் மாலை நடைபெறுகின்றன. பல்லாயிரக்கணக்கான மக்கள், பல இடங்களிலிருந்தும் வந்து தேவாசீர்வாதங்களையும், தெய்வீக சுகங்களையும், விடுதலைகளையும் பெற்று அனேகர் தாங்கள் பெற்ற சுகங்களைச் சாட்சிகளாகப் பகிர்ந்தும் கொண்டார்கள். இன்று கடைசிநாள், கடைசிச் சந்தர்ப்பம். யாவரும் தேவன் கொடுத்த இந்த அருமையான கிருபையின் நாள்களைப் பிரயோசனப் படுத்தி தேவாசீர்வாதங்களையும், தெய்வீக சுகங்களையும், பாவ மன்னிப்பின் நிச்சயத்தையும் பெற்று என்றும் சமாதானத்தோடு வாழ யாவரையும் அன்போடு இயேசு அழைக்கிறார்.**

*இயேசு வாழ்வு தருகிறார்!*

அப்போஸ்தலர்: 2-17 கடைசி நாள்களில் நான் மாமிசமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்.

விடுதலையின் செய்தியும், ஜெபமும்
சுவிசேஷகர்
**ஞானம் அம்புறோஸ்**
*DIVINE LOVE CHURCH TRINCOMALAE*

இரட்சிப்பின் சத்தம் பூரண சுவிசேஷ சபை,
**கொக்குவில்.** (5181) **S.M.ஸ்ரீபன்.**

# இரண்டாம் ஆண்டு நினைவில்

பிறப்பு
1910 - 03 - 10



இறப்பு
2000 - 06 - 23

## ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை

(கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய மூப்பர்)

**"சீவியத்திலும் அவர்களை நேசித்தோம்**
**மரணத்திலும் அவர்களை மறவாதிருப்போம்."**

உங்கள் பிரிவால் துயருறும்:
*கரம்பொன் மேற்கு,* பிள்ளைகள், மருமக்கள்,
*ஊர்காவற்றுறை. (நெடுந்தீவு)* பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
(5133)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பாலசிங்கம் மகேஸ்வரி

கலட்டி, சீனியர் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசிங்கம் மகேஸ்வரி அவர்கள் 23.06.2002 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா பாலசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் ஏக புத்திரியும் தியாகராசா, கனகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் தெய்வேந்திரன் (லஸ்கெம்), லோகேந்திரன் (கனடா), மகாலட்சுமி, மனோராஜினி (சுவிஸ்), ரவீந்திரன் (நோர்வே), மனோபத்மினி (ஜேர்மனி), மனோரஞ்சினி (யாழ்.நாரந்தனை ரோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஸ்ரீரஞ்சினி (யாழ்.மானிப்பாய் இந்துக் கல்லூரி), சிலோசனா (கனடா), சுபாஸ்கரன் (யாழ்.மானிப்பாய் இந்துக் கல்லூரி), சற்குணம் (சுவிஸ்), ராஜேஸ்வரி (நோர்வே), சச்சிதானந்தம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் பவனுஜா (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி), ஓவியா (கனடா), இலக்கியா (கனடா), மிதுலா (சுவிஸ்), சயந்தி (நோர்வே), தர்மிகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2002) செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*16/11, சீனியர் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.* (5175)
தகவல்:
பா.தெய்வேந்திரன் (மகன்)

## திருமதி சிவபாதசுந்தரம் சரஸ்வதி (தங்கம்)

தியாகராஜபவனம் கொடிகாமத்தில் வாழ்ந்தவரான திருமதி சிவபாதசுந்தரம் சரஸ்வதி (தங்கம்) அவர்கள் 23-06-2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

கொடிகாமம். (5182)
தகவல்:
ச.இந்திரன்

## கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம்,ஜூன்25

யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் ஒன்றிய ஏற்பாட்டில் நடத்தப்பட்டுவரும் கருத்தரங்குத் தொடரில் இன்று மாலை 3 மணிக்கு புவியியல்துறை விரிவுரை மண்டபத்தில் "தென்னாசிய அரசியல் சூழல் - ஒரு சமகாலப பார்வை" என்ற பொருளில் கருத்தரங்கு வழங்கப்படவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக அரசறிவியல், சமூகவியல துறை விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம் இந்தக் கருத்துரையை வழங்கவுள்ளார்.

(ஒ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்25

மூளாய் சிறுவர் கல்விக்கும் பால்நிலைய அபிவிருத்திக்குமான நிறுவனம் சங்கானைப்பகுதி பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆர்வலர்களுக்கான யோகாசனக் கருத்தரங்கு ஒன்றை இன்று மாலை 3மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடத்தவுள்ளது.

இந்நிகழ்வில் பேராசிரியர் கலாநிதி தயா சோமசுந்தரம், மற்றும் யோகாசனப் பயிற்றுவிப்பாளர் என். சிவனேஸ்வரராஜா ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

(ஒ-ரி-29)

## புதிய நிர்வாக சபை தெரிவு

யாழ்ப்பாணம்,ஜூன்25

வரணி மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 07ஆம் திகதி காலை 10 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளும்படி அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-ரி)

# மூதூர் அரசியல் பணியகம் மீதான தாக்குதலுக்கு ஹக்கீம் கண்டனம்

கொழும்பு,ஜூலை25

மூதூர் ஆலையடியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல அலுவலகம் தாக்கப்பட்டதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கண்டித்துள்ளார்.

சமாதான முன்னெடுப்புக்களுக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடிய எத்தகைய நடவடிக்கைகளிலும் தமிழ், முஸ்லிம் மக்கள் ஈடுபடக் கூடாது. மாறாக சமாதான முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையிலும் அவற்றிற்கு உந்துசக்தியாகவும் செயற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பிரபாகரனும் தாமும் விடுத்திருந்த கூட்டறிக்கையைத் தொடர்ந்து தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வும் நம்பிக்கையும் தொடர்ந்து பேணப்பட வேண்டியதன் அவசியத்தையும் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.

(ஒ)

# அமைதியான ஐக்கிய இலங்கையை உருவாக்க எம்மை அர்ப்பணிப்போம்

## பொசன் செய்தியில் பிரதமர் உறுதி

கொழும்பு,ஜூன்25

ஐக்கிய இலங்கைக்கான நீதியான, நிரந்தரமான சமாதானத்தை உறுதிசெய்யும் ஒரு கடினமான பணியில் எமது முழுநாடும் ஈடுபட்டிருக்கும் ஒரு வேளையிலேயே பொசன் தினம் உதயமானது.

நேற்று கொண்டாடபபட்ட பொசன் பண்டிகை தினத்தை முன்னிட்டு விடுத்திருந்த செய்தியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

சுபீட்சமான, அமைதியான, ஐக்கிய இலங்கைக்கான குறிக்கோள்களை அடைய எம்மை அர்ப்பணிப்பது இத்தினத்தில் எமது கௌரவத்தைச் செலுத்தக்கூடிய அர்த்தமுள்ள ஒரு வழியாகும். மும்மணிகளின் ஆசியுடன் இந்த உயர்ந்த லட்சியங்களை நாம் அடைய முடியும் என்று நான் நம்புகின்றேன். இவ்வாறு பிரதமர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

(ஒ)

# தீர்வு கிட்டுமென்று நம்பும் மக்களுக்கு வேலணை சம்பவம் ஏமாற்றமளிக்கிறது

## கிராம அலுவலர்கள் கண்டனம்

நல்ல தீர்வு கிட்டுமென்று காத்திருந்த தமிழ் மக்களுக்கு வேலணையில் விடுதலைப் புலிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் பெரும் ஏமாற்றத்தையும் விசனத்தையும் அளித்துள்ளது.

- இவ்வாறு யாழ்.மாவட்டக் கிராம உத்தியோகத்தர் சங்கம் விடுத்த கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

'அரசியலில் கலந்துகொள்ளும் உரிமை இல்லாதபோதும் கிராம மட்டத்தில் கடமை புரியும் கிராம அலுவலர்களாகிய நாங்கள் மக்களின உணர்வுகளை வெளிக்கொண்டு வருவதில் எந்தவிதத் தவறுமில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி நல்லதொரு சூழ்நிலை ஏற்படும் என்று மக்கள் நம்பி இருக்கும் வேளையில் அண்மையில் தீவுப் பகுதியில் கடற்படையினரும் ஓர் அரசியல் கட்சியை சேர்ந்தவர்களும் சேர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவுப் பகுதி பொறுப்பாளரையும் அவரின் உதவியாளரையும் தாக்கிய சம்பவம் மக்களை விசனமடையச் செய்திருக்கிறது. தமிழ் மக்களின் நலன்கருதி விடுதலைப் புலிகள் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சீர்குலைக்கும் செயல் இது. இப்படிப்பட்ட செயலை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது'. - என்றுள்ளது.

### நல்லூர் வணிகர் கழகம்

வேலணைச் சம்பவம் தொடர்பாக நல்லூர் வணிகர்கழகம் விடுத்த அறிகையில்-

'தமிழ் மக்களின் இப்போதைய ஏகோபித்த முக்கிய எதிர்பார்ப்பு சமாதானம்தான். இப்படியான சந்தர்ப்பத்தில் வேலணையில் நடந்த சம்பவமானது மிகவும் மனவேதனைக்குரியதொன்றாகும். இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிப்பதுடன், இனிமேலும் இப்படியான சம்பவங்கள் நடைபெறாமல் சமாதானத்தின் இலக்கை அடையும்வரை சகலரும் ஒத்துழைப்பை நல்க வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.'

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## லான்ட் மாஸ்டரை திருத்தியவர் காயம்

இயங்கிக் கொண்டிருந்த லான்ட் மாஸ்ரர் இயந்திரத்தில் பழுதினைத் திருத்திய சமயம் அதன் விசிறிக்குள் கை சிக்குண்டு ஒருவர் படுகாயமடைந்தார்.

சாவகச்சேரி, சங்கத்தானையில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் கந்தசாமி கருணாகரன் (வயது 38) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஒ-15)

## கலந்துரையாடல்

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் ப.நோ.கூ.சங்கத் தலைவர்கள், பொதுமுகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல இரண்டாம்படிச் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் பொது முகாமையாளர்களையும் கலந்தகொள்ளும் படி அறிவிக்கப்பட்டுள்ளது.


(ஒ-ரி)

# தொற்றும் நோய்க்கு ஆளாகேன் பராபரமே - I

"மனுசன் நிம்மதியாக இருக்க முடியேல்லை!" என்றார் அவர்.

"ஏனய்யா?"

"பாரப்பா பக்கத்துவீட்டிலை எனக்கெண்டு ஒண்டு. அதாலை வீட்டை விட்டு ஒரு கொஞ்சமும் அசைய முடியுதில்லை."



**வைரஸ்கள்:**
**இரண்டு லட்சம் மடங்கு உருப் பெருப்பிக்கப்பட்டது (லட்டு?)**

"ஏன்?"

"அதையெப்படிச்சொல்றது. கண் மறைஞ்சால் தேங்காயைப் புடுங்குது, கதியாலை வெட்டுது, கோழியை அமுக்குது, வேலியை கொஞ்சம் கொஞ்சமாய் இஞ்சாலை தள்ளுது, ஓடிப்போன நேரம் ஒரு மேசை எடுத்து வித்துப்போட்டு பக்கத்துவீடு எண்டு ஒரு இது இருக்கா... ... கெட்ட கிருமி!"

"கண்டனீங்களா... வெறுங் கண்ணாலை"

"இரண்டு கண்ணாலையும்... ஒளிச்சு நிண்டு பாத்தனான் சத்தி..."

"கிருமிகள் சாதாரண கண்ணுக்கு தெரிவதில்லை"

"நான் அதைச்சொல்லேல்லை" என்றார் அவர்.

நுண்ணுயிர்கள்... நுண்ணங்கிகள் சாதாரண கண்ணுக்குத் தெரிவதில்லை. மிகமிகச் சிறிய உயிரினங்கள் ஒரு தலைமுடியின் நுனியில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தக்கூடிய அளவுக்கு சிறியவை அவை! நுணுக்குக்காட்டி என்கிற உருப்பெருக்கும் கருவி கண்டுபிடிக்கப்படும்வரை இப்படி ஒரு நுண்ணுயிர் உலகம் இருப்பதை மனிதகுலம்

**சுகநலம்**


அறிந்திருக்கவில்லை!

உலகம் தோன்றியகாலத்திலிருந்தே நுண்ணங்கிகள் வாழ்கின்றன. அவை இந்த உலகம் இயங்குவதற்கு இயற்கையின் சுழற்சி நடைபெறுவதற்கு அடிப்படையாயிருந்தன (நிர்வாகக்குழு!). உதாரணமாக காற்றிலுள்ள நைதரசனை மண்ணுக்குச் சேர்க்கின்றன. இதனால்தான் எங்களுக்கு புரதச்சத்து கிடைக்கிறது. புமிப்பந்தில் மனிதர்கள் வாழக்கூடியதாயிருக்கிறது. (பாராட்டி வாழ்த்துகிறோம்.) மரணித்தஉடல் மட்கி மண்ணாவதற்கும் அவைதான் காரணம். எமது முன்னோர்கள் எங்களைப் போலவேதான் வாழ்ந்தார்கள். பாடினார்கள் ஆடினார்கள் ஓடினார்கள் யுத்தம் புரிந்தார்கள் நோயுற்றார்கள் மரணித்து மட்கி மண்ணாய்ப் போனார்கள். ஆனால் இந்த சுகதுக்கங்களிலெல்லாம் நுண்ணுயிர்களும் பங்கு கொள்வதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. (நாங்கள் அறிந்திருக்கிறோமாக்கும்!)

இந்த நுண்ணுயிர்களில் சில கெட்டவை. அவைதான் மனிதர், விலங்கு, தாவரங்களில் நோய்களை உண்டாக்குகின்றன. இவை நோய்க் கிருமிகள் எனப்படுகின்றன. நோய்க கிருமிகள் ஒரு மனிதரிலிருந்து இன்னொரு மனிதருக்கு பரவக்கூடியவை. இதனால் நோய்களால் பலர் பாதிப்படைகிறார்கள். இவை தொற்று நோய்கள் எனப்படுகின்றன. நுண்ணுயிர்கள் பற்றி அறியப்படாத காலத்தில் பெரிய அளவில் பரவின. பெருந்தொகையான மக்கள் மரணமடைந்தார்கள். இவை கொள்ளை நோய்கள் எனப்பட்டன. அம்மை, பிளேக், வாந்திபேதி, நெருப்புக்காய்ச்சல், மலேரியா போன்ற நோய்களுக்குப் பயந்து மக்கள் ஊரைவிட்டே ஓடினார்கள். அரசர்கள் இராச்சியங்களை மாற்றினார்கள்! திரண்டிருந்த படையினரிடையே நோய்கள் பரவி பல யுத்தங்கள் தோற்றிருக்கின்றன! கெட்ட ஆவிகளின் வேலை, கடவுளின் கோபம் என்பவைதான் நோய்களுக்கு காரணம் என்றே மக்கள் அன்று கருதினர். அதனால் மருத்துவர்களோடு மந்திரவாதிகளும் மதப் பெரியார்களும் வேலைப பழு கூடி அவதியுற்றனர்?!! இந்த நீண்ட வரலாறு லியூவன்கொக் (1675) என்பவர் அசைகின்ற சிறு உயிரினங்களை நுணுக்குக்காட்டியூடாக அவதானித்ததிலிருந்து மாற்றமடையத் தொடங்கியது. காலப்போக்கில் இன்றைக்கு உலகைப் பீதியில் ஆழ்த்துகின்ற 'அந்திரெக்ஸ்' கிருமியைக் கொண்டுதான் 'கொச்' என்பவர் தொற்று நோய்கள் நுண்ணுயிர்களால் உருவாகின்றன என்று காட்டினார். மனிதர்கள் விழித்துக் கொண்டார்கள். இது 1876இல்.

அது நோய்க் கிருமிகளுக்கும் மனிதகுலத்துக்குமான யுத்தத்தின் ஆரம்பம்!

எல்லா யுத்தங்களுக்கும் உரிய அடிப்படைத் தந்திரங்கள் இதற்கும் பொருந்தும். கண்ணுக்குத் தெரியாத எதிரியை அவதானித்து பலம், பலவீனம் அறிகிற பொறுப்பை எடுத்துக் கொண்டவர்கள் விஞ்ஞானிகள்.



**பக்ரீறியா:**
**16,000 மடங்கு உருப்பெருப்பிக்கப்பட்ட நெருப்புக் காய்ச்சல் கிருமி இரண்டாய்ப் பிரிக்கிறது.**

பசி மறந்து, இயல்பு வாழ்வின் சுவைகளை இழந்து நுணுக்குக்காட்டிகளோடு வாழத் தொடங்கிய அவர்களால் நுண்ணுயிர் உலகம் விரியத் தொடங்கியது. நுண்ணுயிர்களை இனம் பிரித்தார்கள். ஒவ்வொரு நோய்க்குமுரிய கிருமிகளை அடையாளங்கண்டு கொண்டார்கள். அவற்றை வளர்த்து, ஆராய்ந்து அவற்றின் இயல்புகளை, பெருகும் முறைகளை, தொற்றும் முறைகளை, அவற்றை அழிக்கும் மருந்துகளைக் கண்டறிந்தார்கள்.

வைரஸ், பக்ரீயா, பங்கசு, ஒரு கல விலங்கு, புழு என வகைப்படுத்தப்படும் அந்த சிறிய உயிரினங்கள் ஏராளம், விதம்விதம், ஒவ்வொன்றும் தனி ரகம்! (பெட்டகம் பார்க்க) ஆதனால்தான் இன்றைக்கு "அது நல்லாம்பின்ரை மாடுதான் வளவுக்குள்ளை வந்து வாழையைக் கடிச்சது" என்பது போல "சளியில் மைகோ பக்டீரியம், ரியு பகுளோசிஸ் (கச நோய்க்கிருமி) இருக்கிறது. இது கச நோய்" என்று கூறமுடிகிறது.

மருந்து கொடுத்து நோய்க்கிருமிகளை அழித்து நோயைக் குணப்படுத்த முடிகிறது. இந்த தொற்று நோய்க்கெதிரான யுத்தத்தில் மிகப் பெரும் வெற்றியாக பயங்கரமான அம்மை நோய் உலகிலிருந்து முற்றாக அழித்தொழிக்கப்பட்டிருக்கிறது. எனினும் எய்ட்ஸ் பூதாகரமாய் எழுந்து நிற்கிறது. இன்னும் நோற்றுநோய்களுக்கு வருடந்தோறும் 10 மில்லியன் மக்கள் - அதுவும் எங்களைப் போன்ற - அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில்தான் பலியாகிறார்கள். காரணமாக ஏழ்மையும் கல்வியறிவின்மையும் அமைகின்றன.

"வீட்டுக்காறர் வீட்டுக்காறர் நாயைப் பிடியுங்கோ" என்று கேற்றுக்கு வெளியில் நின்று கூப்பிடுமளவுக்கு கடிநாய் கவனம் உள்ளது போல, நோய்க் கிருமிகள் கவனம் கவலை ஒவ்வொரு மனிதருக்கும் தேவை.

**டாக்டர்**
**அ. கிருஷ்ணேந்திரன்**

அறியாமையுள்ள மனிதர் தொற்று நோய்கள் பரவுவதற்கு காரணமாகிறார்கள். கிருமிகள் வலுப்பெற உதவுகிறார்கள்.

கிருமிகளுக்கும் மனிதருக்குமான யுத்தத்தில் அவர்கள் கிருமிகள் பக்கம்!

"நீங்கள் எந்தப் பக்கம்?" கேள்விக்கு பதில் சூடாய் விழுந்தது. "சும்மா ஒரு ஆறுதலுக்கு கதைக்க வந்தால்... கடவுளே... உண்மையில் நீர்தானப்பா பெரியகிருமி!" அவர் விருட்டென எழுந்து சென்றார்!

அவர் செல்லவும் மற்றவர் உள்ளே நுழையவும் சரியாக இருந்தது.

"என்ன ஆள் இங்கை வந்திட்டுப் போறார்." என்றார் வந்தவர்.


"ஆளைத் தெரியுமா?"

"தெரியுமாவா பக்கத்து வீடு.. கெட்ட கிருமி.." அவர் தொடங்கினார்!

கிருமிகள் உலகமையா இது!

★ ★ ★

## இது கிருமிகள் உலகம்



**சில நோய்கள் - கிருமிகள் (பெயர்களை தவறுதலாக குழந்தைக்கு சூட்டிவிடாதீர்கள்)**

**❏ பற்றீரியா**

| | |
|---|---|
| நெருப்புக்காய்ச்சல் | - சல்மனெல்லா டைபி |
| வாந்திபேதி | - விப்றியோ கொலரா |
| ஏற்புவலி | - குளொஸ்ரிடியம் டெடனி |
| கசம் | - மைக்கோபக்ரீறியம் ரியுபகுளோசிஸ் |

**❏ வைரஸ்**

| | |
|---|---|
| கொப்புளிப்பான் | - வரிசெல்லா |
| எயிட்ஸ் | - எச்ஐவி |

**❏ பங்கசு**

| | |
|---|---|
| தேமல் | - பிட்ரியாசிஸ் |

**❏ ஒரு கலவிலங்கு**

| | |
|---|---|
| மலேரியா | - பிளாஸ்மோடியம் வைவாக்ஸ் |

இவை சில உதாரணங்கள் மட்டுமே.

# யஸீர் அரபாத் மீண்டும் இஸ்ரேலிய முற்றுகையில்

ஜெருசலேம்,ஜூன்25

மேற்குக்கரையின் பலஸ்தீன நகரான ரமழாவில் உள்ள பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் அலுவலகத்தை இஸ்ரேலிய இராணுவம் சுற்றிவளைத்துள்ளது. அரபாத்தின் அலுவலகம் அமைந்துள்ள பகுதியைச் சூழ இஸ்ரேலிய இராணுவத்தின் டாங்கிகளும், கவச வாகனங்களும் குவிக்கப்பட்டுள்ளன.

டாங்கிகளும், கனரக வாகனங்களும் ஹெலிகொப்டர்களின் உதவியுடன் ரமழாவிலுள்ள பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் அலுவலகத்தை முற்றுகையிட்டுள்ளதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர். அலுவலகத்துக்குள் யஸர் அரபாத் சிக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஏற்கனவே இஸ்ரேலிய இராணுவத்தின் தாக்குதல்களால் சேதமடைந்த அரபாத்தின் அலுவலகத்துக்குள் நுழைவதற்கான ஐந்து வாயில்களையும் தடை செய்யும் வகையில் புல்டோஸர்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

இஸ்ரேலியர்கள் மீது தற்கொலைத் தாக்குதல்களை நடத்தும் பலஸ்தீனர் மீது கடும் நடவடிக்கை எடுக்க அரபாத் தவறியதாகக் குற்றஞ்சாட்டி அவரது அலுவலகத்தை முற்றுகையிட்ட இஸ்ரேலியப் படையினர் கடந்த மாதம்தான் அரபாத்தை முற்றுகையிலிருந்து விடுவித்திருந்தனர்.

இந்த நிலையில் தொடரும் பலஸ்தீனத் தற்கொலைத் தாக்குதல்களுக்குப் பதில் நடவடிக்கையாகவே அரபாத்தை இஸ்ரேலிய இராணுவம் முற்றுகையிட்டுள்ளது.

தற்போதைய முற்றுகையில் ரமழா நகருக்கான உணவு, குடிதண்ணீர் மற்றும் மருத்துவ வசதிகள் போன்றவற்றை இஸ்ரேலிய படையினர் தடுத்து விடக்கூடும் என்று ரமழா நகர மக்கள் அச்சம் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

(ஒ-9)

## மியான்மரில் அரசியல் மாற்றம் தேவை; இப்படி கூறுகிறார் ஆங் ஷான் சூகி

லண்டன்,ஜூன்25

மியான்மரில் விரைவில் அரசியல மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும் என அந்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவி ஆங் ஷான் சூகி தெரிவித்துள்ளார்.

மியான்மரில் ஜனநாயக உரிமை கேட்டு போராடும் பெண் தலைவியான ஆங் ஷான் சூகி லண்டன் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'மியான்மரில் விரைவில் அரசியல் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும். இந்த முயற்சியில் காலதாமதம் இருக்கக் கூடாது. இது தொடர்பாக ராணுவ ஆட்சியாளர்களுடன் பேச்சு நடத்தத் தயாராக இருக்கிறேன். மியான்மரில் பொருளாதாரம் வளர அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் ஒத்துழைப்புத் தரவேண்டும்' என்றும் அவர் தனது பேட்டியில் கூறியுள்ளார்.

57 வயதான ஆங் ஷான் சூகி நோபல் பரிசு பெற்றவரென்பதும், மியான்மர் ராணுவ அரசால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த இவர், 19 மாதங்களின் பின்னதாக கடந்த மே மாதம் விடுவிக்கப்பட்டு தற்போது சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கவை. (ஒ-9)

உலக அரங்கில்

## ஆப்கான் முன்னாள் அமைச்சருக்கு மீண்டும் பதவி வழங்கவேண்டாம்!

### நீதிமன்று தடை உத்தரவு

காபூல்,ஜூன்25

ஆப்கானிஸ்தானின் முன்னாள் பெண் அமைச்சரான சிமா சமர் என்பவருக்கு மீண்டும் அமைச்சரவையில் பதவி வழங்கக்கூடாது என ஆப்கான் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஆப்கானின் முன்னாள் பெண் அமைச்சரான சிமா சமர் தலிபான்களின் ஆட்சி விரட்டப்பட்டு கமீட் ஹர்சே இடைக்கால அரசின் தலைவராகப் பதவி ஏற்றபோது அவரது அமைச்சரவையில் இடம்பெற்றிருந்தார்.

ஆனால், கடந்த வாரம் ஆப்கான் அமைச்சரவை மீண்டும் தெரிவு செய்யப்பட்டபோது சிமா சமர் அதில் இடம் பெறவில்லை.

"இஸ்லாம் மதத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை" என்று சிமா சமர் வெளிநாட்டுப் பத்திரிகைக்கு அளிதத பேட்டியொன்றில் கூறியிருந்தார். அதன் காரணமாகவே அவருக்குப் பதவி வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக ஆப்கான் உயர் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி, "சிமா சமருக்கு இப்போது மட்டும அல்ல, எப்போதுமே அமைச்சரவையில் பதவி வழங்கக் கூடாது" என்று தீர்ப்புக் கூறியுள்ளார். (ஒ-9)

## பங்களாதேஷ் அதிபர் பதவி விலகினார்

டாக்கா,ஜூன்25

பங்களாதேஷ் ஜனாபதி பத்ரூ தோசா சவுத்திரி தனது பதவியை ராஜினாமா செய்ததை அடுத்து அந்நாட்டின் தற்காலிக ஜனாதிபதியாக - பங்களாதேஷ் நாடாளுமன்ற சபாநாயகராகப் பதவி வகித்த ஜமிருதீன் சர்க்கார் நேற்று முன்தினம் ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார்.

பங்களாதேஷின் முன்னாள் ஜனாதிபதி ஜியாவுர் ரகுமான் சுட்டுக்கொல்லப்பட்டதன் நினைவுதினமன்று அவரது கல்லறைக்குச் சென்று, பத்ரு அஞ்சலி செலுத்தவில்லை. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த ஆளும் பங்களாதேஷ் தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பத்ரு பதவி விலகவேண்டும். அல்லது கண்டனத் தீமானம் கொண்டு வருவோம் என்று மிரட்டியிருந்தனர்.

இதனையடுத்தே பத்ரு தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். அடுத்த 3 மாதத்துக்குள் புதிய ஜனாதிபதியை பங்களாதேஷ் தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்வார்கள். (ஒ-9)

## சதாம் ஹுசேன் எழுதிய புத்தகங்கள் கல்வித்திட்டத்தில்

பாக்தாத்,ஜூன்25

ஈராக் அதிபர் சதாம் ஹுசேன் எழுதிய மூன்று புத்தகங்கள், ஈராக் பாடசாலைகளின் கல்வித் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த நாட்டின் கல்விசார் நடவடிக்கைகள் தொடர்பான அமைச்சர் அறிவித்துள்ளார்.

'ஜமீபா அன்ட் த கிங்', 'த போர்டிபைட் காஸ்டில்', 'வுமன் அன்ட் ஏ சிட்டி' ஆகிய மூன்று நாவல்களுமே எதிர்வரும் கல்வியாண்டிலிருந்து பாடத்திட்டத்தில் இணைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-9)


யாழ் நகர வாசிகளே!

இதோ இப்போது உங்கள் தேவையறிந்து உங்கள் கரங்களுக்கும்.

உயர்தரமான மெழுகுத்தடவப்பட்ட பாதுகாப்பான

ALADIN WAX MATCHES

அலடின் தீப்பெட்டி

ஏக விநியோகத்தர்:

ரூபா வெர்சடைல் டிரேடர்ஸ்

104ஏ, ஸ்ரான்லி றோட்,

யாழ்ப்பாணம்.

(C/22682)


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 12 - 06 - 1988

மறைவு 24 - 06 - 2002

### செல்வன் செல்வநாயகம் றஜிந்தன்

*பால் மணம் மாறாப் பாலகனே றஜிந்தன்குட்டி*
*உன் வாடா முகம் இன்று ஏன் வாடுதையா*
*ஒரு குடும்பமாய் விளையாடி மழலை மொழி*
*பேசிய உனக்கு - இன்று*
*விளையாட்டு விபரீதமாய்ப் போய் விட்டதையா!*
*உன் பிரிவைத் தாங்காத எம் இல்லம்*
*கண்ணீர் மழை பொழியுதையா!*
*உன்னைப் பிரிந்த எம்முள்ளம்*
*அனலிடைப்பட்ட புழுவாய்த் துடிக்குதையா!*
*இன்று எம்மை விட்டுத் தனியே செல்ல*
*எப்படி மனம் வந்ததையா?*
*உன் அன்னையவள் கண்ணீர் காண*
*எம் இதயம் வேகுதையா!*

*உன் பிரிவால் துயருறும்:*

மெதடிஸ்த சிறுவர் இல்ல மாணவர்கள், பராமரிப்பாளர்கள், முகாமைக்குரு.

*இல.9. வேம்படி வீதி. யாழ்ப்பாணம்.* (5137)

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்றோஸ் எலியாஸ்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்றோஸ் எலியாஸ் அவர்கள் 22.06.2002 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் செபஸ்ரியாம்பிள்ளை எலியாஸின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: எம்.ஏ.பிரகாசராசா (மைத்துனர்)

*41, மடம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.* (5196)

ஓ

சரசாலை இலந்தைத்திடல்

## அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய அந்தரீதப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்

**அம்பிகை அடியார்களே!**

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருஷம் ஆனிமாதம் 13ஆம் நாள் (27.06.2002) வியாழக்கிழமை முற்பகல் 11 மணி முதல் 12.26மணிவரை வரும் கன்னிலக்கின சுபமுகூர்த்தத்தில் அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாளுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறவும், தொடர்ந்து நித்திய, நைமித்தியங்கள் தொடரவும் அம்பிகையின் திருவருள் கிட்டியுள்ளது.

இதற்கான பூர்வாங்கக் கிரியைகள் நாளை புதன்கிழமை காலை தொடக்கம் தொடர்ந்து நடைபெறும்.

அத்தருணங்களில் அடியார்கள் வருகைதந்து, அம்பிகையைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*இலந்தைத் திடல், சரசாலை.* (5189) ஆலய நிர்வாக சபையினர்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



HAPPY BIRTHDAY

### செல்வன் பிரபாகரன் பிரபானந்த் *(பிரவீன்)*

இமையாணன் உடுப்பிட்டியைச் சேர்ந்த திரு. திருமதி பிரபாகரன் - சாமினி தம்பதியினரின்

### செல்வப் புதல்வன் பிரபானந்த்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (25.06.2002) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் மிக எளிமையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா மற்றும் அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணன்மார், மாமன்மார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார், அன்ரி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இமையூர் முருகன் அருள் பெற்றுப் பல்லாண்டுகாலம் சீருஞ்சிறப்புடனும் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

*அன்புடன் வாழ்த்தும்:* அப்பம்மா (பூரணம்).

*இமையாணன்.* (5191)

## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



24.06.2002இல் வாழ்வில் அறுபது கடந்து நிற்கும் அல்வாய்

### திரு.ம.கணேசலிங்கம்

*(எழுதுநர், உள்ளூராட்சி சேவை, இ.மி.ச.)*

அவர்கள் வாழ்வில் வைரவிழா, சமூகசேவையில் பொன்விழா, அரச சேவையிலும், இல்லற வாழ்க்கையிலும் மணிவிழா கண்டுகொண்ட நண்பனை வளர்க! வாழ்க!! குடும்பத்துடன் நீடு வாழ்க!!! என உளமார வாழ்த்துகின்றோம்.

வடமராட்சி தெற்கு மேற்கு நண்பர்கள்,
அல்வாய் மனோகரா ச.ச.நிலையம், ச.ச.நிலைய சமாசம்,
தெற்கு மேற்கு பிரஜைகள் குழு, உள்ளூராட்சிச் சபை, இ.மி.ச. (5192)

# சமய சந்நிதிகளி

காரைநகர்,ஜூன்25

யாழ்ப்பாணம் திருவண்ணைநகர் அருள்மிகு ஸ்ரீ அங்குசபாச பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் நடைபெறுகின்றது.

கடந்த 18ஆம் திகதி ஆரம்பமாகி 11தினங்கள் நடைபெறும் இந்த நிகழ்வில் இறுதிநாளான எதிர்வரும் 28ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகமும் பிற்பகல் 3.30 மணிக்கு மணவாளக்கோல உற்சவமும் இடம்பெறும். (ம-15-13-73)

★ ★ ★

ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்தநயினார் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 9ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (3-13-100)

★ ★ ★

சுன்னாகம்,ஜூன்25

ஊரெழு மேற்கு மீனாட்சியம்பாள் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஸடா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் நாளை இடம்பெறும். (3-13-27)

★ ★ ★

சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய அந்தரீதப் பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் எதிர வரும் வியாழக்கிழமை பகல் 11.50 மணிக்கும் 12.26மணிக்கும் இடையில் நடைபெறவுள்ள கும்பாபிஷேகததுக்கான பூர்வாங்கக் கிரியைகள் நாளை ஆரம்பமாகும். (3-152)

★ ★ ★

வலி.தெற்கு,ஜூன்25

யாழ். வண்ணார்பண்ணை காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை பகல் 11மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து நாள்கள் உற்சவம் நடைபெறும்.

அடுத்த மாதம் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (3-152)

★ ★ ★

அரியாலை,ஜூன்25

ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு நாளை புதன்கிழமை இரவு 7மணிக்கு சைவப்புலவர் கந்தசத்தியதாசன் 'சைவத் திருமுறைகள்' என்ற தலைப்பிலும் மறுநாள் வியாழக்கிழமை மதுர கவி காரை எம்.பி.அருளானந்தன் 'தாய்மையே' இறைவனின் முதல் வடிவம் என்ற தலைப்பிலும் தெய்வீகப் பேருரை ஆற்றுவார்கள். (ம-13-17-ரி)

## தலைமைத்துவ பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜூன்25

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ் மாவட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிநெறி திருகோணமலையில் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிறது.

மூன்று தினங்கள் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சிநெறி திருகோணமலை அன்புவழிபுரம் விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறியில் கலந்து கொள்வதற்காக யாழ். மாவட்டத்தின் பத்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் இருந்து 10பேர் திருகோணமலைக்கு சென்றுள்ளனர். (ம-6)

## பரிசளிப்பு விழா

வண்ணார்பண்ணை மேற்கு ஐயனார் கோயிலடி ஸ்ரீ விசுவேச விநாயகர் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு அப்பகுதியைச் சேர்ந்த நான்கு கிராம அலுவலர் பிரிவு மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் இணைந்து நடத்திய சைவ சமயக் கட்டுரைப் போட்டிக்கான பரிசளிப்பு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மேற்படி ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஐயனார் கோயிலடி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி மோகனா தர்மராஜா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடத் தலைவி திருமதி நாச்சியார் செல்வநாயகம் கலந்து கொள்வார்.

விழாவின் இறுதியில் இன்னிசை நிகழ்ச்சி இடம்பெறும். (3-15)

வடமராட்சி கிழக்கு
**பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியம்**
நடத்திய
## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

எமது ஒன்றிய சீட்டிழுப்பு 23.06.2002 ஞாயிறு அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டதன் பிரகாரம் முடிவுகள் வருமாறு:

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு | இல. | 3326 |
| இரண்டாம் பரிசு | இல. | 2724 |
| மூன்றாம் பரிசு | இல. | 0882 |

ஆறுதற் பரிசுக்குரிய இலக்கங்கள்:

3017 0458 2689 3154 7500

☞ பரிசுக்குரியவர்கள் குடத்தனை தென்னிந்தியத் திருச்சபையில் சனி,ஞாயிறு தினங்களில் பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

(5199) - ஒன்றியத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி செல்லத்துரை சீவநாயகம்

(கந்தரோடை)

ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

கந்தரோடை,
சுன்னாகம்.
(5204)

பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 4ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



## பரமானந்தம் அஷாந்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12.10.1996 | 10.07.1998 |

*கொள்ளை கொண்ட கிள்ளையுனை*
*கொள்ளையிட்டுச் சென்றது யார்?*
*பிள்ளை என்று தந்த பின்னர்*
*பிரித்து வைத்த கூற்றுவன் யார்?*

வீடியோ ஆனந்த் ஸ்ருடியோ

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

உன் நினைவைச் சுமக்கும்,
தாய், தந்தை,
(5206) சகோதரன், சகோதரிகள்.

# மரண அறிவித்தல்கள்

## சின்னப்பு குட்டித்தம்பி

உரும்பிராயைச் சேர்ந்த சின்னப்பு குட்டித்தம்பி அவர்கள் நேற்று (24.06.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - அன்னமுத்து தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இராசம்மா தம்பதிகளின் மருமகனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் சற்குணநாதன் (வைத்தியலிங்கம் கம்பனி, கொழும்பு), திகழ்மதி (வவா), இரவீந்திரன் (ரவிகார்), குணசிங்கம் (அப்பன்), அகிலன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுமித்திரா, சற்குணநாதன், (சிமெந்து கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), துளசிமலர், சிவனேஸ்வரி, தயாநிதி ஆகியோரின் மாமனாரும் சாதுலன், சாந்திபா, சாமரன், கௌசல்யா, கஜீபன், பிருந்தா, ஹனீஸ்குமார், கேதீஸ்குமார், ரொசாந்தன், அனோஜன், அருண் ஆகியோரின் பாசமிகு பேரனும் செல்லமுத்து, பவளம், மகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி, தம்பு, சின்னத்துரை, செல்லத்துரை, நல்லையா ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.06.2002) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*வேம்பன் வீதி தெற்கு,*
*உரும்பிராய்.*
(5208)

கு.அன்னலட்சுமி
(மனைவி)

## குழந்தைவேலு நடராசா

**(ஓய்வுபெற்ற புகையிரத கட்டட மேற்பார்வையாளர்)**

மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வினாயகர் வீதி, அல்வாய் தெற்கை வதிவிடமாகவும்கொண்ட குழந்தைவேலு நடராசா நேற்று (24.06.2002) திங்கட்கிழமை பிற்பகல் 6 மணியளவில் காலமானார்.

அன்னார் அழகம்மாவின் அன்புக் கணவரும் அழகரத்தினம் (ஆசிரியர், நெல்லியடி ம.ம.வி), இராசரத்தினம் (வ.பி.போ.க. பண்டகசாலைப் பொறுப்பாளர், வவுனியா), செல்வரத்தினம் (கனடா), தியாகரத்தினம் (நோர்வே), குணரத்தினம் (கனடா), ஜீவரத்தினம் (கனடா), சுகந்தா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் அ.பவளராணி, இ.வசந்தமலர், செ.நிர்மலா (கனடா), தி.இன்பம் (நோர்வே), கு.பிரமினா (கனடா), மோகன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் அ.மலரவன் (விஞ்ஞானபீடம், கொழும்பு பல்கலைக்கழகம்), தெ.மகிந்தா, கு.தேவ்குமார் (நோர்வே), அ.வினோதா, இ.மாலவன் (மருத்துவபீடம், 3ஆம் வருடம், யாழ். பல்கலைக்கழகம், இ.சுதர்சன், இ.ஆதித்தன், இ.மீரா, செ.அபிரா, செ.அனா, செ.அரவிந், கு.லக்சிகா, கு.லாரன்ஸ், மோ.சிந்தயன், மோ.சிந்தயா, தி.எழில், தி.இனியவன், ந.வசிகரன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் த.பரமசாமி (கல்லுவம்), ஐ.த.நடராசா (மீசாலை கிழக்கு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*வினாயகர் வீதி,*
*அல்வாய் தெற்கு,*
*அல்வாய்.*
(5209)

ந.அழகரத்தினம்
(மகன்)

# தேவை

சிலிப்பர் கட்டைகள் போன்ற வலுவுடைய ஆறு மரக்கட்டைகள் அவசரமாகத் தேவைப்படுகின்றன.

திரு.சந்திரன்,
343, கஸ்தூரியார் வீதி,
(5193) யாழ்ப்பாணம்.

# தவறிவிட்டது

என்.எம்.பசீர் (இல.08, கே.கே. வீதி, புத்தளம்) என்பவருடைய வாகன அனுமதிப்பத்திரம், இரண்டு அடையாள அட்டைகள் (கவ்லா உம்மா, சித்தி ஆயிஷா) புலிகளின் வாகனப் பாஸ் இவைகளுடன் கூடிய பேர்ஸ் சாவகச்சேரியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்

செல்வம் கூல்பார், சாவகச்சேரி
அல்லது
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்,
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் (5198)

என்ற முகவரியில் கொடுத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

லஷ்சுமி இணுவில்.
இன்று முதல்
பிரசாந், ரிங்கிகன்னா, ரகுவரன்
மஜ்னு
(கீல்ஸ்)
தினசரி: 10.30, 2.30, 6.00 (ப.நே.) (5052)

நாகம்ஸ் சுன்னாகம்
நவரச நாயகன் கார்த்திக்
(இருவேடம்),
ரோஜா, கௌசல்யா நடித்த
சந்தித்தவேளை
(கீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00, 6.30 (புதிய நேரம்) (5118)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
ஸ்ரீகாந்த், பூமிகா, ரகுவரன், விவேக் நடித்த
ரோஜாக்கூட்டம்
(கீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.) (C-22539)

ராஜா யாழ்ப்பாணம்.
குணால், மோனல்
மற்றும் பலர் நடித்த
பேசாத கண்ணும் பேசுமே...
காட்சிகள்: தினசரி 10.30, 2.30, 5.30
சனி, ஞாயிறு 10.30, 2.30, 5.30
(C/22538)

# மரண அறிவித்தல்கள்

கந்தரோடை

## திருமதி செல்லத்துரை சீவநாயகம்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை சீவநாயகம் அவர்கள் 21.06.2002 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாருடைய இறுதிக்கிரியைகள் நாளை (26.06.2002) புதன்கிழமை காலை 11.00 மணிக்கு கந்தரோடையில் இருக்கும் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கந்தரோடை சங்கம்புலவு மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

*கந்தரோடை,*
*சுன்னாகம்.*
(5203)

*தொடர்புகளுக்கு:* செ.மகாதேவா
(சமாதான நீதிவான்)

## திருமதி முத்துத்தம்பி செல்லம்மா

திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த திருமதி முத்துத்தம்பி செல்லம்மா ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பியின் அன்பு மனைவியும் செல்வநாயகி தனபாலசிங்கம் (கனடா), ஜெயசிங்கம், தர்மகுலசிங்கம் (ஜேர்மனி), இந்திராதேவி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசலிங்கம், புஸ்பராணி (கனடா), நிர்மலா, பவானி (ஜேர்மனி), காலஞ்சென்ற சற்குணநாதன் ஆகியோரின் மாமியாரும் சுமதி, சுரேஸ், அரவிந்தன், ஜீவகன், துசா, தயாளன், வித்தியா, நிசாந்தன், அனுசன், சர்மினி, விஜய், ஜெனோ, ஜெனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் செல்லத்துரை காலஞ்சென்றவர்களான முத்துச்சாமி, சின்னப்பு, நல்லம்மா ஆகியோரின் சகோதரியும் துரைராசா, சின்னத்துரை, தங்கராசா ஆகியோரின் சிறிய தாயாருமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*பதிவாளர் ஒழுங்கை,*
*திருநெல்வேலி கிழக்கு.*
(5205)

செ.சின்னத்துரை
(பெறாமகன்)

## நடராசா தர்மலிங்கம்

மாவிட்டபுரம், மடத்தடியை நிரந்தர வதிவிடமாகவும் கோப்பாய் மத்தியை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட நடராசா தர்மலிங்கம் 19.06.2002 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - பொன்னம்மா (பிரான்ஸ்) தம்பதிகளின் மகனும் சாந்தகுமாரியின் அன்புக் கணவரும் லக்ஸ்மன் (இந்தியா), தர்மலா, கோசிலா ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகம்மா, நல்லம்மா, பாலசிங்கம் (இந்தியா), முத்துலிங்கம் (கனடா), சந்திரலிங்கம் (பிரான்ஸ்), பத்மராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சடாசிவம் (அமரர்) - பஞ்சரத்தினம் தம்பதிகளின் மருமகனும் வீரசிங்கம் (அமரர்), திடவீரசிங்கம் (பிரான்ஸ்), பத்மினி (பிரான்ஸ்), மகேஸ்வரி (கனடா), திருச்சோதி (பிரான்ஸ்), தங்கவடிவேல் (பிரான்ஸ்), ஜெயசோதி, மீனதாஸ் (அமரர்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00மணியளவில் கோப்பாய் மத்தியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*காளிகோயிலடி,*
*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.*
(5202)

சாந்தகுமாரி
(மனைவி)

# உடன்படிக்கையை மீறும் செயல்களில் தொடர்ந்தும் ஈடுபடுகிறது அரசாங்கம்!

## நெதர்லாந்து தூதரிடம் கரிகாலன் குற்றச்சாட்டு

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயல்களில் அரசு தொடர்ந்து ஈடுபட்டுவருகின்றது.

மட்டக்களப்புக்கு விஜயம் செய்துள்ள நெதர்லாந்து தூதரிடம் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட விசேட அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன் இப்படி முறையிட்டுள்ளார்.

மட்டக்களப்புக்கு மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கைக்கான நெதர்லாந்து தூதர் சுகையின் பிளையிங் காட் நேற்று வந்திருந்தார்.

நேற்றுக்காலை கொக்கட்டிச்சோலையில் அவர் கரிகாலனைச் சந்தித்துக் கலந்துரையாடினார். மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் விசுவும் இச்சந்திப்பில் கலந்துகொண்டார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை மதித்து எமது செயற்பாடுகளை நாம் மேற்கொண்டுவருகின்றோம். ஆனால், அரசு உடன்படிக்கையை மீறும் செயல்களில் நாட்டம் கொண்டுள்ளது.

தீவகத்தில் எமது போராளிகளான செம்மணன், தயாளன் ஆகியோர் அரச படைகளினால் தாக்கப்பட்டனர். மூதூரில் எமது அலுவலகம் தாக்கப்பட்டது. இத்தாக்குதல்கள் மூலம் உடன்பாட்டை அரசு மீறியுள்ளது என்று கரிகாலன் எடுத்துக்கூறினார். (ம-3)

# கலைஞர், எழுத்தாளருடன் விடுதலைப் புலிகள் சந்திப்பு!

யாழ்.மாவட்ட கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், படைப்பாளர்களுடனான சந்திப்பு ஒன்றை விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறையினர் ஏற்பாடு செய்துள்ளனர். எதிர்வரும் 30ஆம் திகதி மாலை 3 மணிக்கு நல்லூர் இளங் கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

சந்திப்பு நாளில் சிறப்பு நிகழ்வாக வன்னியிலிருந்து சமாதான கலைப்பயணம் மேற்கொண்டு வருகைதந்துள்ள கலைஞர்களின் நடிப்பிலும், புதுவை அன்ரனின் நெறியாள்கையிலும் உருவான 'கரை தேடும் ஓடங்கள்' நாடக விமர்சன அரங்கும் இடம்பெறவுள்ளது.

கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், படைப்பாளர்கள், ஊடகவியலாளர்கள், கலை ஆர்வலர்கள் ஆகியோரைக் கலந்துகொள்ளும்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.(ம-3-ரி)

## மட்டக்குளியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யளவில் இரண்டு பொலீஸார் சிவில் உடையில் கதிரானவத்தைப் பக்கம் சென்றனர். அங்கே வீடுகளின் முன்னால் நின்ற இளைஞர்களுடன் பொலஸார் பேச்சுக் கொடுத்தனர். வந்தவர்கள் பொலீஸார் என்று இளைஞர்களுக்குத் தெரியாத நிலையில், பேச்சு வாய்த்தர்க்கமாகி கைகலப்பில் முடிந்தது.

இதில் ஒரு பொலீஸார் காயமடைந்தார் என்று கூறப்படுகிறது.

இதையடுத்து சிறிதுநேரம் கடந்து சீருடையில் பொலீஸார் அங்கு சென்றனர். இந்த நால்வருக்கும் இளைஞர்களுக்கும் இடையே மீண்டும் தகராறு ஏற்பட்டது.

இரவு நேரம் மூன்றாவது முறையாகப் பொலீஸார் கூடுதலான எண்ணிக்கையில் அங்கே சென்று வீடுகளையும் வீடுகளில் இருந்த பொருள்களையும் அடித்து நொறுக்கி சேதப்படுத்தியதோடு வயது, பால் வித்தியாசமின்றி எல்லோரையும் அடித்தும் உதைத்தும் அடாவடித்தனம் பண்ணினர். ஒன்பது பேரைக் கைது செய்து பொலீஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

வடயமறிந்த யோகராஜன் எம்.பி. அந்த இடத்துக்குச் சென்று நிலைமையை நேரில் பார்வையிட்டார்; பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

பொலீஸ் நிலையம் சென்று நிலையப் பொறுப்பதிகாரியுடன் பேசினார். இளைஞர்களில் குற்றமிழைத்தவர்கள் இருந்தால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுங்கள். மற்றவர்களை விடுதலை செய்யுங்கள் என்று கேட்டுக்கொண்டார். இப்படியான பொலீஸ் பயங்கரம் நிறுத்தப்படவேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார். அவ்வளவோடு நிற்காமல் சம்பவம் பற்றி பதில் பொலீஸ்மா அதிபர் ஆனந்தராஜவிடமும் யோகராஜன் எம்.பி. முறைப்பாடு செய்தார்.

பதில் பொலீஸ்மா அதிபர் தலையிட்டதை அடுத்து, இருவர் தவிர ஏனையோர் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர் என்று தெரிகிறது. அந்தப் பகுதியில் பொலீஸ் பயங்கரம் தவிர்க்கப்பட்டு அமைதி நிலை நாட்டப்பட்டுள்ளது என்றும் அறியவருகிறது.

## முக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் தீர்வையின் பெயரால் யாழ்ப்பாணம் மற்றும் வன்னியில் பொருள்கள் மிக அதிகவிலையில் விற்கப்படுவதாக நாம் அறிகின்றோம்.

மொத்த வர்த்தகர் ஒருவர் யாழ்ப்பாணம் அல்லது வன்னியில் உள்ள சில்லறை வர்த்தகருக்கு பொருள்களைக் கொடுக்கும்போது அந்தப் பொருளுக்கான தீர்வையை அவர் ஏற்கனவே செலுத்தியிருப்பர். எனவே யாழ்ப்பாணத்தில் அல்லது வன்னியில் உள்ள சில்லறை வர்த்தகர் ஒருவர் தான் தீர்வை செலுத்துவதாகக் கூறி பொருள்களின் விலையை அதிகரிக்கவேண்டிய தேவை இல்லை. இதனை சகலரும் தெளிவாக உணர்ந்து செயற்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

கற்பூரம், வெடி, லேகியம், மதுபானம், பத்திகள், சாம்பிராணி, தசாங்கம், மெழுகுதிரி ஆகியவற்றுக்கு மட்டுமே 25சதவீதம் தீர்வை விதிக்கப்பட்டுள்ளது. ஏனைய பொருள்களுக்கு நியாயமான அடிப்படையில் தீர்வை அறவிடப்படுகின்றது - என்றார் அவர். (ம-3)

## நயினாதீவில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிடித்தனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த நவரெத்தினம் விக்கினேஸ்வரன் (வயது 42) என்ற அந்த நபர் பின்னர் ஊர்காவற்றுறைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அந்த நபரிடம் இருந்து 17 கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. (ம-3)

# வேலணைச் சம்பவத்தில் ஈடுபட்டோரை இனம்கண்டு தண்டிக்க வேண்டும்

## இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் அமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்25

வேலணையில் விடுதலைப் புலிகளின் தீவகப் பொறுப்பாளர் செம்மணன் தாக்கப்பட்ட சம்பவத்தில் ஈடுபட்டவர்களை இனங்கண்டு தண்டிக்க வேண்டும் என்று இடம்பெயர்ந்த வடக்கு முஸ்லிம்களின் அமைப்பு அரசைக் கேட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் மூவின மக்களும் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்ல முழுமூச்சாக முனைப்புடன் செயற்படும்வேளையில் யாழ். முஸ்லிம் மக்கள்கூட தங்களுக்கு ஏற்பட்ட துயரச் சம்பவங்களை மறப்போம், மன்னிப்போம் என்று சமாதானத்திற்காக கைகோர்த்து நிற்கும்வேளையில், விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் வேலணையில் சமாதானத்தை சீர்குலைக்க முற்படும் சக்திகளினால் தாக்கப்பட்டது மிகவும் கவலைக்குரியதும் கண்டனத்திற்குரியதுமாகும்.

மேலும், நிராயுதபாணிகளாக அரசியற் பணிபுரியும் புலிகள் அமைப்பினர் ஆயுதமுனையில் அச்சுறுத்தப்பட்டது அப்பட்டமான யுத்தநிறுத்த ஒப்பந்த மீறலாகும்.

- இவ்வாறான சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் யாராயிலும் அவர்கள் இனங்காணப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று யாழ். முஸ்லிம் மக்கள் சார்பாக இடம்பெயர்ந்த வடக்கு முஸலிம்களின் அமைப்பு அரசாங்கத்தை வேண்டிக்கொள்கிறது - என்று உள்ளது. (ம-3)

## யுத்தநிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கிறது. பலவீனங்களை நீக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதற்காக விரைவில் மூன்று குழுக்களை அமைக்கவிருக்கிறோம். அக்குழுக்களின் அறிக்கைகளை பெற்று நடவடிக்கை எடுக்கவிருக்கிறேன்.

- இவ்வாறு அமைச்சர் மாரப்பன கூறினார். (ஐ)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இன்று பிற்பகல் 2 மணிக்கு திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இருந்து கண்டன ஊர்வலம் ஆரம்பமாகும். சங்கங்கள் விடுத்திருக்கும் கண்டனங்களின் பிரதிகள் ஊர்வலத்தில் எடுத்துச்செல்லப்பட்டு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுக் காரியாலயத் தலைவரிடம் கையளிக்கப் படும். (ஐ)

## கட்டுப்பாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ள் இந்த விடயத்தையும் தெரிவித்தார்.

பொருள்களின் கொள்முதல் விலை மாற்றம், போக்குவரத்துச் செலவு என்பன போன்ற விவரங்கள் சரியாகப் பெறப்பட்டதும் கூடியவிரைவில் இந்தக் கட்டுப்பாட்டு விலைகள் அறிவிக்கப்படும்.

எமது மக்களின் நன்மை கருதி இந்த நடவடிக்கையை நாம் எடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம் - என்றும் அவர் மேலும் சொன்னார். (ம-3)


ENGLISH
SPOKEN AND GRAMMAR
By: BRITTO
புதிய பிரிவு ஆரம்பம்
இடம்: கொக்குவில் (ஞானபண்டிதர் பாடசாலைக்கு அருகில்)
காலம்: 26.06.2002 (புதன்)
நேரம்: 4.30 (ப.நே.)
வகுப்புகள்: செவ்வாய், வியாழன்.
(C/22665)

ஈசன் கல்வி நிலையம்
எமது வழமையான ஆசிரியர் குழுவுடன் ஆரம்பமாகின்றது.
A/L DAY CLASS
வர்த்தகப் பிரிவு
காலம்: 27.06.2002 (THU.)
நேரம்: 8.00 a.m.
(5150)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
அர்ஜுன் நடித்த
ஏழுமலை
வீடியோ விமல்
(C/22691) யாழ்ப்பாணம்.



## முக்கிய அறிவித்தல்
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம். யாழ்.மாவட்டம்.
பொதுச்சபைக் கூட்டம்

காலம் : நாளை (26.06.2002) புதன்கிழமை பி.ப. 3.00 மணி
இடம் : நாமகள் வித்தியாசாலை, பொற்பதி வீதி, கொக்குவில்.

யாழ்.மாவட்ட தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகளையும் பிரத்தியேக வகுப்பு நடத்துபவர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பொதுச் செயலாளர்,
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ்.மாவட்டம்.
(5207)



## இலங்கையில் சமாதானமும் ஒப்புரவும் ஓர் இந்தியக் கண்ணோட்டம்

உரை : கலாநிதி தயான்சந்த் கார் (அதிபர், தமிழ்நாடு இறையியற் கல்லூரி, மதுரை)
இடம் : யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவு (யாழ். வைத்தியசாலை முன்பாக)
காலம் : நாளை (26.06.2002) புதன்கிழமை பி.ப. 4.00 மணி
தலைவர் : வண.அ.அ.போல் (அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி)
ஆசியுரை : பேராயர் எஸ்.ஜெபநேசன்.

இயக்குநர்,
கிறிஸ்தவ சமய சமூக ஆராய்ச்சி மன்றம்.
(CISRS)
(C/22690)


## மரண அறிவித்தல்

### செல்லையா திருநாவுக்கரசு

தம்மளை, அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா திருநாவுக்கரசு நேற்று (24.06.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்ற கந்தையா தம்பதிகளின் மருமகனும் பர்வததேவியின் அன்புக் கணவரும் திருச்செல்வம், வரதராசா, வதனராசா (கனடா), வனஜா, ஜீவராஜா, கிரிஜா, அனுஷா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் கலைமதி, செல்வி, விக்கினேஸ்வரன், தேவானந்தன், சுதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் விஜிதா, விதுஷா, ஜனதீபன், ஜனனி, தர்ஷனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அளவெட்டி மேற்கு,*
*அளவெட்டி.*

தகவல்:
தி.பர்வததேவி (மனைவி)
(5201)




அருட்தந்தை அகஸ்ரின் முண்டக்கட் தலைமையில்
## இறை தியான திருவிழிப்பு குணமாக்கல் வழிபாடு

*காலம்:* நாளை (26.06.2002) புதன் இரவு 7 மணிமுதல்
*இடம்:* சம்பத்திரிசியார் கல்லூரி மைதானம்



- மெழுகுதிரிகள் கொண்டுவரவும்
- தண்ணீர், எண்ணெய் ஆசீர்வதிக்கப்படும்.

உடல், உள, ஆன்மீக விடுதலை பெற நம்பிக்கையோடு வாருங்கள்!

இன்று மாலை 4 - 8வரை தும்பளையில் வழிபாடு நடைபெறும்.

*ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.* (4961) இறை தியான குழுவினர்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.06.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.